ஓம்

நம்பியாண்டார்

சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்தர
கலாசாலைத் தமிழ்ப் புலவர்,

மயிலை - சிவ. முத்துக்குமாரசுவாமி முதலியார்
எழுதியது.

MADRAS:
THE TEACHERS' PUBLISHING HOUSE.

பதிப்புரிமை] [அணா ஆறு.

Q23 w2l
N26

THE KESARI PRINTING WORKS
MADRAS

78179

OFFICE OF THE REGISTRAR C...
22 FEB 1926
MADRAS

ஓம்

நூன்முகம்

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் காரியதரிசியும், 'சைவம்' என்னும் செந்தமிழ்ப் பத்திரிகையின் ஆசிரியருமாய இருக்கம் - ஆதிமூல முதலியார் அவர்கள் எழுதியது.

என் கெழுதகை நண்பரும், சைவசமய உண்மை யுழைப்பாளரும், சிவனடியார் திருக்கூட்டத்தின் உதவி காரியதரிசியுமாகிய தமிழ்ப்புலவர் திருவாளர் சிவ - முத்துக்குமாரசுவாமி முதலியார் அவர்கள் தமிழுலகிற்குப் புதிதாய் உதவிய பத்திச்சுவை கனிந்த இவ்வின்பச் சரிதை, புலவர் பெருமக்கள் விழையும் சிறு வாக்கியங்களில், எளிய புதிய செந்தமிழ் நடையில், இலக்கண நெறி வழாது, சொல்லணி பொருளணி நிரம்பப் பெற்றுப் படிப்போர் உள்ளத்தைக் கவருமாறு வரையப்பட்டுளது. இதனை யோதி இன்புறும் மாணவர்கள் எய்தற்கரிய அன்பெனும் உலவா அமுதை எளிதிற் பெறுவரென்பது திண்ணம். இஃது எவ்வாற்றானும் மதிக்கற்பாலதெனவும், மாணவர்களுக்குப் பெரிதும் பயனளிக்க வல்லதெனவும், பாடசாலைகளில் வைத்தற்கு மிக ஏற்ற பாடப்புத்தகமெனவும் கூறுதல் மிகையன்று. இந்நூலாசிரியர் இத்தகைய அரிய புத்தகங்கள் பல தமிழுலகிற்கு அளித்து உதவி புரியுமாறு அவர்க்கு நீண்ட ஆயுளையும், பிணியில் வாழ்வையும், திண்ணிய தேகத்தையும் அருட் செய்யுமாறு எல்லாம் வல்ல முழுமுதற் செழும் பொருளாகிய சிவபெருமான் திருவடிகளைச் சிந்தையார வழுத்துகின்றேன்.

ஓம்

உரிமையுரை

வைதிகச் சைவச் செழுநெறி பூண்டவரும், செந்தமிழ் நூலாராய்ச்சி யுள்ளவரும், சைவ சித்தாந்த நுண்பொருள் ஆய்ந்தவருமாகிய அன்பிற் சிறந்த திருவாளர் குருநாத முதலியார் அவர்கள் ஆருயிர்ச் செல்வியும், என் மனைவியுமாய, இறைவன் இணைமலர்ப் பூங்கழ லெய்திய ஸ்ரீமதி - மங்கையர்க்கரசி அம்மைக்கு இப்புத்தகத்தை உரிமையாக்குகின்றேன்.

சிவ-முத்து

ஓம்

நம்பியாண்டார்

துவக்கம்

நம்பியாண்டார் என்பவர் இறைவனிடத்து அன்பு மிக்க ஒரு சிறுவர். இவர் இளமையிலேயே எல்லோராலும் வியக்கத்தக்க உயரிய நிலையை நண்ணினர். அறிவிற் சிறந்த பெரியோர் பலர் இவர் பாதத்தில் விழுந்து பணிந்தனர். புலமை மிக்க பாவலரும் நாவலரும் இவரைப் பாடிப் புகழ்ந் தனர். பெருநிதி படைத்த செல்வர்களும், மணி முடி தரித்த மன்னர்களும் இவரது மலரடி சூடி மகிழ்ந்தனர். இவ்வாறு சீரும் சிறப்பும் பெற்ற இவர் இதுபோழ்து நாம் எல்லோ ரும் கைகூப்பித் தொழத்தக்க கடவுளரில் ஒருவராகத் திகழ் கின்றனர்.

தெய்வத்தன்மை வாய்ந்த இப்பெருமகனரது வரலாறு கற்ேறார்க்கும் மற்ேறார்க்கும் கழிபெருங் களிப்பினை மிகுதி யும் நல்கும்; கடவுளரிடத்து அன்பினைப் பெருக்கும்; கற்பினுங் கேட்பினும் கருத்தினில் இனிக்கும். ஆதலின், திருவருள் துணைகொண்டு, இவரது திவ்விய சரிதத்தைச் செவ்விதின் ஆராய்வாம்.

உ

திருநாரையூர்

தில்லையம்பதிக்கு அணிமையில் ஓர் அழகிய சிற்றூர் உளது. அது புகழின் மிக்க புண்ணியத் திருப்பதி. ஞானசம் பந்தராலும் நாவுக்கரசராலும் அது வியந்து பாடப்பெற்

றது. அதனைத் திருநாரையூர் என அனைவரும் அழைப்பர்; அஃது அப்பெயர் பெற்றமைக்குக் காரணமுங் கூறுவர். அங்கே நாரைகள் மிகுதியும் உளவாதலின், அது நாரையூர் என்னும் நாமம் பெற்றது என நவிலுவர் சிலர். நாரைபூசித்து நற்கதி யுற்றதால் அவ்வூர் நாரையூர் என்று வழங்கலாயிற்று என இயம்புவர் சிலர். பிற்கூறியதை வலியுறுத்த ஒரு புரா ண கதையும் உண்டு. அது வருமாறு:

தேவலோகத்திலே கந்தருவர் என ஒரு பகுப்பினர் உளர். அவர்கள் அழகிய சிறகினை யுடையவர்கள். அவர்க ளுள் ஒருவன் தேவதத்தன் என்பவன். அவன் ஒருநாள் ஆகா யத்தின் வழியே செல்லுங்கால் பழம் நிறைந்துள்ள மரம் ஒன்றைக் கண்ணுற்றான். ஆதலின், அப்பழங்களில் சில வற்றைப் பறிக்க விரும்பி அவன் அம்மரத்தின்மீது தங்கி னான். அதுபோழ்து கோபத்தில் தலைசிறந்த துருவாசர் அம் மரத்தடியில் அமர்ந்து தவஞ்செய் திருந்தார். இதனை அக் கந்தருவன் சிறிதும் உணர்ந்தானில்லை. ஆதலின், அவன் பழம் பறிக்க முயலும்போது அவைகளுள் ஒன்று அத்தவசி யின் தலையில் திடுமென விழுந்தது. அதனால் துன்புற்ற முனி வர், தவங்கலைந்து, சினம் மிகுந்து மேலே நோக்கினார். ஒரு கந்தருவன் கனிபறிக்கக் கண்டார் அக்கடுந்தவசி. கண்டதுங் கரைகாணக் கோபமது கொண்டார்; சினத்தின் மிகுதியால் பற்களைக் கடித்தார்; மீசை துடித்தார்; இருமி எழுந்தார்; கோபக்கனல் வீசக் கூர்ந்து நோக்கினார்; நீண்டு வளர்ந்த தம் தாடியைத் தடவினார். யாது செய்வான் அக்கந்தருவன்? அவன் அச்சத்தால் உடல் வியர்த்தான்; உளம்திகைத்தான்; பிழை பெரிதென்று துக்கித்தான்; செய்வகை யாதெனச் சிந்தித்தான். முடிவில் அவன் அம்முனிவர் காலில் விழுந்து

பன்முறையும் வேண்டினன். அத்தவமுனிவின் கோபம் அதுகண்டும் தணியவில்லை. ஆதலின் அவர், அக்கந்தருவனை நாரையாகச் சபித்துப் போயினர். தேவதத்தன் என்னும் அக்கந்தருவன் நாரைவடிவத்துடன் பலநாள் வருந்தினன். முடிவில் அவன் இத்தலத்தே எழுந்தருளியுள்ள சிவபெருமானை வழிபட்டுத் தன் பழைய வடிவினைப் பெற்றதோடு, என்றும் அழியாத முத்தியின்பத்தினையும் பெற்று உய்ந்தான்.

௫

ஊரின் வளம்

முற்காலத்தே திருநாரையூர் நீர்வளத்தாலும் நிலவளத்தாலும் தலை சிறந்து விளங்கியது. பருவ மழை தவறாது பொழிந்து வந்தமையான் மக்கள் யாவரும் இன்புற்று வாழ்ந்து வந்தனர். வயல்களில் நெற்கதிர்கள் முற்றித் தலை சாய்ந்து அறுப்போரின்றிப் போரெனப் பொலிந்தன. சோலைகளில் உள்ள பல்வகை மரங்களும் ஓங்கி வளர்ந்து பச்சைப் பந்தரிட்டாற்போன்று அடர்ந்து தழைத் திருந்தன. அம் மரங்களின் மீது அமர்ந்திருந்த குரங்கினங்கள் கூத்தாட மலர்களிலிருந்து தேன்மாரி பொழிந்தது. மா, பலா, வாழை முதலிய கனிகள் பறிப்போரின்றிக் குப்பல் குப்பலாய்க் கீழே குவிந்து கிடந்தன. பொய்கைகளிலுள்ள நீரினைச் செந்தாமரை மலர்கள் முற்றிலும் மறைக்கலுற்றன. அவற்றின் இடையே நாரைகள் நின்றிருந்தமை, துறவிகள் தூநீறணிந்து நெருப்பிடை இருந்து அருந்தவஞ் செய்தலை ஒத்திருந்தது. பருத்துயர்ந்த புன்னை மரங்களின் கிளைகளின்மீது மயில்கள் தம்தோகைகளை விரித்து எழில்நடம் புரிந்தன. தேமாமரத்திலிருந்த பூங்குயில்கள் சிறுவர்களின் கூக்குரலுக்குச் சிறிதுஞ் சலிப்புறாது அவர்களோடு மாறுபட்டுக் கூவி மகிழ்ந்தன.

யானைபோல் பருத்துப் பெருமிதத்துடன் செல்லும் எருமைகள், குவளை மலர்களையும் கருப்பந் தழைகளையுமே உணவாகக் கொண்டு, பசும்புற் பாயலில் பள்ளி கொண்டன. கழனிகளில் கிடந்த முத்துக்களையும், சங்குகளையும் கொணர்ந்து மகளிர் விளையாட்டயர்ந்தனர். கன்றுகள் உண்டு மிகுந்த பசுப்பாலினைக் கொண்டு இளஞ் சிறுவர்கள் நீர் விளையாடல் புரிந்தனர். மாதர்கள் தம் குழந்தைகட்கு வெண்ணெயினையே உணவென ஊட்டலாயினர். தேனினை யுண்டு திளைத்த சிறுவர்கள் கருப்பஞ்சாறு கைப்பெனக் கூறினர். செல்வமிகுதியால் மக்கள் ஓட்டையும் பொன்னையும் ஒன்றெனமதித்தனர்.

ச

கோயில் குளங்கள்

இவ்வாறு பல் வளங்களாலும் பொலிவுற்று விளங்கிய அத்திருநாரையூரில் ஓர் அழகிய சிவாலயம் உண்டு. ஆண்டு எழுந்தருளியுள்ள சிவபெருமான் திருநாமம் சவுந்தரேசர் என்பது; தேவியார் பெயர் திரிபுரசுந்தரியம்மை. அங்குள்ள திருக்குளத்திற்குக் காருண்ய தீர்த்தம் என்று பெயர். தல விருட்சம் புன்னை யாகும்.

இவையே அன்றி, அவ்வூரில் விநாயகப் பெருமான் ஆலயம் ஒன்றும் எழிலுற்று இலங்குகின்றது. நம்பியாண்டார் என்னும் பெருந்தகையார் அழியாப் புகழ்பெற்று நின்று நிலவுதற்கு மூலகாரணராய் இருந்தவர் இப்பெருமானேயாவர். இவரது திருநாமம் பொல்லாப் பிள்ளையார் என்பது. எனவே இவர் மிகப் பொல்லாதவர் போலும் என்று எண்ணுதல் ஆகாது. இவர் சாந்தமே உருவெனத் திகழுஞ் சுந்தரமூர்த்தி; அன்பர்கட்கு இரங்கி அருள்புரியும் ஆனந்த வள்ளல்; உற்ற

விடத்து ஊன்று கோலென்ன உதவுதல் புரியும் ஒருபெருந் தனிமுதல். ஆயின், இவர்க்கு இப்பெயர் வந்ததின் காரணந்தான் யாதோவெனின், அதனையும் ஒரு சிறிது ஆராய்வோம்.

இவரது இயற்பெயர் 'பொள்ளாப் பிள்ளையார்' என்பது. அது பின்னர்ப் 'பொல்லாப் பிள்ளையார்' என மருவிற்றும். 'பொள்ளல்'—'துளைத்தல்' அல்லது 'செதுக்குதல்' என்பதாகும். ஆகவே பொள்ளாப் பிள்ளையார் என்பதற்கு எவராலும் எக்காலத்தும் உளி முதலிய ஆயுதங்களால் பொளியப்படாது தானே முளைத்த தனிமுதல் அல்லது சுயம்பு மூர்த்தி எனப்பொருள் படுகின்றது. இதனால் இவ்விநாயகர் கோயில் மிகப் பழமையானது என்பதை நாம் நன்கு உணரலாகும்.

௫

நம்பியின் தாய் தந்தையர்

சுமார் ஆயிரம் ஆண்டுகட்கு முன்னர் ஓர் அன்பர் கற்பிற் சிறந்த தம் மனைவியாரோடு இவ்வூரில் வாழ்ந்து வந்தனர். இவர் ஆதிசைவ அந்தணர் குலத்தில் தோன்றியவர்; கல்வி கேள்விகளில் வல்லவர்; ஒழுக்கம் உயிரினும் பெரிதென மதிப்பவர்.

இவ்வந்தணர் மேற்கூறிய பொல்லாப் பிள்ளையாரிடத்து மிகுதியும் அன்பு பூண்டிருந்தார். இவர் நாடோறும் அப்பெருமான் ஆலயத்திற்குச் சென்று வேதவிதிப்படி அவருக்கு மஞ்சனம் ஆட்டுவார்; ஆடையாபரணங்களால் அவரை அலங்கரிப்பார்; அவருக்குப் பூமாலை புனைந்து சூடுவார்; பாமாலை புகழ்ந்து பாடுவார்; தூப தீப நிவேதனங்கள் காட்டி மிகுதியும் மகிழ்வு கொள்வார்.

இவர் மனைவியாரும் அவ்வாறே தெய்வபக்தி வாய்ந்தவர்; ஒழுக்கத்தில் மிகச் சிறந்தவர்; கட்டழகும் குணப்பொலிவும் கவினப்பெற்றவர்; தம் கொழுநன் குறிப்பறிந்து நடப்பவர்; இல்லறத்தை இனிமை பெற இயற்றிவருபவர்.

இவ்விருவருக்கும் ஒன்றால் ஒன்று குறைவின்றி எல்லாச் செல்வ வளங்களும் நிறைந்திருந்தன. எனினும், பிள்ளைப்பேறின்மை என்பது ஒரு பெருங் குறையாய் நேர்ந்தது. ஆதலின் இவ்வன்பர் பொல்லாப்பிள்ளையாரின் ஆலயத்துக்குச் செல்லும்போதெல்லாம் அவரை வணங்கி, 'எம்பெருமானே உலகமெல்லாம் போற்றத் தக்க ஒரு சற்புத்திரனை அடியேனுக்கு அருளுதல் வேண்டும்' எனப் பன்முறையும் விண்ணப்பித்து வரலாயினர்.

இவ்வன்பரது வேண்டுதலுக்கு அப்பெருமானும் இணங்கினர். சில நாட்களுக்கெல்லாம் மனைவியார் கருப்ப முற்றனர். அது கண்ட அந்தணர் அகமகிழ்ந்து இறைவன் இன்னருளை எண்ணி எண்ணி இறும்பூதெய்தினர். அவ்வாறே அவ்வம்மையாரும் அப்பெருமானின் வண்மை கண்டு வியப்பெய்தி, அவரது பொன் மலரடிகளைப் பன்முறையும் வழுத்தி வரலாயினர்.

௩

அண்ணலார் திருவவதாரம்

பத்துத் திங்களும் முற்றுப்பெற்றன. நாளுங் கோளும் நன்கமைந்த ஒரு நல்லோரையில் அவ்வம்மையார் அழகின் கொழுந்தென்ன ஓர் ஆண்மகவை ஈன்றனர். அத்திருமகனரது திவ்விய தோற்றத்தைக் கண்ட யாவரும் 'இக்குழந்தை முருகவேள் திருவவதாரமோ' எனத் திகைத்தனர். மாசு மறுவற்ற இவரது மலர்முகத்தைக் காணவேண்டி, மாதர் பலர்

தேனீயென்னத் திரண்டுவந்து, நாற்புறமும் மொய்த்து நின்றனர். அண்ணலார் பிறந்த இப்பெருநாளை யாவரும் திருநாளெனக் கொண்டாடினர்.

இவ்வாறு நாள் பல சென்றன. பொற்றொட்டில் பூட்டும் பெருவிழா வந்தது. ஆதலின், அத்தாய் தந்தையர் நலம் பல அமைந்த அந்நாளில் இவரைப் பூந்தொட்டிலிற் பொற்புறக் கிடத்திப் பூரிப்பெய்தினர்; மேளம் முழக்கி மங்களம் பாடி மகிழ்வு பூத்தனர்; தம் அருந்தவச் சேயினை நம்பியாண்டார் என்னும் அருமைப் பெயரால் அழைத்து அக மகிழ்ந்தனர். நம்பியாண்டார் நாளொருமேனிகொண்டு பொழுதொரு வண்ணங்காட்டிப் பொலிவு பெற்றுத் திகழ்ந்தனர்.

எ

பிள்ளைப் பருவம்

நம் அண்ணலாரின் இளம்பருவச் செயல்கள் இயம்புந்தரமன்று. அவர், தம் அருகே வருவோரைக் கண்டால் பொன்முகங் காட்டிக் குறுநகை புரிவார்; தாமரை அனைய கைகளால் தம் தளிர் அடிகளைத் தாவித் தாவிப் பிடிப்பார்; நாற்புறமும் பார்த்துப் பார்த்து வியப்புறுவார்; தொட்டிலில் தொங்கும் கிளியினை எட்டிப் பிடிக்க எழும்புவார்; குழலொலி கேட்டுக் குதூகலிப்பார்; யாழொலி கேட்டு இன்புறுவார்; சாமவேதம் ஓத்துத் தம் மழலை மொழிகளால் கீதம் மிழற்றுவார்; தும்பியைப் பார்த்துத் தும்பி கொட்டுவார்; கழிபேருவகையால் திருக்கரம் தட்டுவார்; " அம்மே —அப்பா " என்று தம் குமுதவாயினல் அமுதமொழி பழகுவார்.

நம்பிக்கு நடக்கும் பருவம் நணுகிற்று. அவர் தம் தாமரைப் பாதம் தரையில் அழுந்தத் தள்ளாடித் தள்ளாடி

நடக்கலாயினர். அவர் அப்பருவத்தில் புரிந்த அருஞ்செயல்கள் அளப்பில. அவர் யானை போன்று அசைந்தசைந் தாடுவார்; குயி லிசை கேட்டுக் கூவி மகிழ்வார்; மயில் நடங் காண் மகிழ்வின் ஓடுவார்; கன்றினைக் காணின் கட்டித் தழுவுவார்; கிள்ளையின் கிளவி கேட்டு உள்ளம் உவப்பார்; வெண்ணிலவு கண்டு 'வா' வென விளிப்பார்; காக்கை போல் கரைந்து அவைகட்குப் பாலுஞ் சோறும் பரிவுடன் அளிப்பார்.

அவர் அவ்விளவயதிலேயே தம் தந்தையார் காலை மாலை புரியும் கடவுள் வழிபாட்டினைக் கூர்ந்து நோக்கிக் கருத்தில் கொள்ளுவார்; பின்னர்த் தாமும் அவ்வாறே தனியிடத்திருந்து தவறுதலின்றி இயற்றி இன்புறுவார். அவரது அருஞ்செயல்களை மறைவில் கண்டு மகிழும் அன்னையார் அவரை வாரி யெடுத்துக் கட்டித் தழுவுவார்; உச்சி மோந்து உவகை பூப்பார்; கன்னங் கிள்ளிக் கணக்கில் முத்தங்கள் தந்து களிகூருவார்.

அ.

பூணூல் அணிதல்

நம் அண்ணலாருக்கு ஐந்தாம் ஆண்டு அணுகிற்று. பெற்றோர்கள் இவரைப் பள்ளியில் வைக்கப் பரிவுற்றனர். ஆதலின், அவர்கள் ஓர் நன்னாள் குறித்து நாற்புறமும் ஓலை விடுத்தனர்; தம் இல்லத்தைப் புதுக்கிச் சுவர்கட்குச் சுண்ணம் தீட்டினர்; புதுமணல் பரப்பித் தங்கள் இல்லத்தைப் பொலிவு படுத்தினர்; பச்சைப் பந்தர் பரக்க இட்டனர்; சித்திரக் கொடிகள் சிறக்கக் கட்டினர்; மகர தோரணங்கள் மாண்புறத் தூக்கினர்; தம் இல்லம் சிறக்குமாறு ஓவியப் பாவைகள் ஒழுங்குற அமைத்தனர்.

பல்லிடங்களினின்றும் சுற்றத்தார் திரண்டு வந்தனர். வாழை, தென்னை, கமுகு, கூந்தற்பனை முதலியன வண்டிகளில் வந்து இறங்கின. இராப்பகலாக வேலையாட்கள் அவ் விழாவின் பொருட்டு வருந்தி யுழைத்தனர்.

கோழி கூவுதற்கு முன்னர் நம் எந்தலார் இல்லத்தின் கண் மேளம் முழங்கிற்று. காலையில் தோன்றுங் கதிரவன் என்ன நம் தவச்செல்வர் துயில் விட்டெழுந்து எழில் முகங் காட்டினர். மாதர் அவரை நறுமணநீர் கொண்டு ஆட்டினர்; பொன்னணி பல கண்டு அவரது மாசில் மேனியை மிளிரச் செய்தனர்; பாட்டாடைகளானும் பன்மலர் மாலைகளானும் அவரை அலங்கரித்தனர். தூய வெண்ணீற்றின் தண்ணொளி அவரது முகமண்டலத்தில் பொலிவுற் றெழுந்தது.

ஐயர் குறித்த அமுதவேளையும் அணுகிற்று. குழலொலியும், யாழொலியும், மங்கலப் பெண்களின் வாழ்த்தொலியும் விம்மியெழ, நம் அண்ணலார் யாக சாலையை நண்ணினர். அப்போது, யாகசாலை இந்திரன் போக சாலையாய்ப் பொலிவுற்றது. அந்தணர் வேதவொலி ஓத வொலியினை அடக்கியது.

அறிவிற் சிறந்து அநுபவம் முதிர்ந்த அந்தணர் ஒருவர், கிரியை பலவும் அருமையிற் புரிந்து, நம்பிள்ளைப் பெருமானுக்குப் பூண் நூல் தரித்தனர். பொன்னொத்திலகும் அவரது அழகிய மேனியில் அஃது மின்னொத்து மிளிர்ந்தது. அது போழ்து, மேள முழக்கம் அண்டத்தைப் பிளந்து அப்புறஞ் சென்றது; மாதர் மங்களம் பாடி மகிழ்வு பூத்தனர்; அந்தணர் அனைவரும் "அர, அர" என்ன ஆரவாரித்து அலர் மழை சொரிந்தனர். நம்பியின் நளின வதனத்தில் ஞான வொளி வீசியது; அவரது அன்னை தந்தையார் ஆனந்தக்கண்ணீர் பொழிந்து இன்பக்கடலில் திளைத்தனர்.

௩

சுவடி தூக்குதல்

அவ்வூரின் வடகோடியில் முனிவர் ஆசிரமம் போன்று ஒளிரும் ஒரு சிறு குடில் உண்டு. அஃது ஒரு பூம் பொழிலிடையே பொலிவு பெற்றுத் திகழ்ந்தது. அன்று அச்சிறு குடில் மிகச் சிறப்பாக அலங்கரிக்கப் பெற்றிருந்தது. நல்லுடை யணிந்த சிறுவர் பலர் வெண்மணல் பரப்பிய முற்றத்தின்கண் வரிசை வரிசையாய் அமர்ந்திருந்தனர். அவர்கட்கு இடையே முதியவர் ஒருவர் வீற்றிருந்தார். அவரே நம் அண்ணலாருக்கு ஆசிரியராய் அமரும் பாக்கியம் பெற்றவர். அச்சிறு குடிலே நம் பெருந்தகையாளர் பயிலப் புகும் புண்ணியம் வாய்ந்த பொற்புடைக் கல்விக் கழகம்.

நம்பியாண்டார், பல்வரிசைகளோடும் சுற்றத்தார் சூழ, மேள தாளம் முழங்கப், பாடசாலைக்குப் புறப்பட்டார். அது போழ்து அவரது முகவிலாசம் முன்னினும் பன்மடங்கு எழில் கொண்டு இலங்கியது. பனையோலையால் முடைந்த சிறு தடுக்கொன்றும், பட்டுக் கயிற்றினுல் பிணைக்கப்பட்ட ஓலைச் சுவடிக் கற்றை யொன்றும் அவர் தம் அழகிய தோளில் ஊசலாடின. அவர், ஒரு கரத்தே எழுதுகோல் கொண்டு, மற்றொரு கரத்தால் தம் தந்தையின் சிறுவிரல் பிடித்துப் பெருமிதத்துடன் செல்லலாயினர்.

சிறிது நேரத்தில் யாவரும் பாடசாலையை நண்ணினர். மேளதாள முழக்கமும் மக்களின் ஆரவாரமும் முன்னினும் அதிகரித்தன. நம்பியின் நல்வரவு கண்ட பள்ளிச்சிறுர்கள் துள்ளிக் குதித்தனர். தவப்பெருந் தகையினராய நம்பி, தம் ஆசிரியரின் அடிமலர் கண்டு, அவாவுடன் வீழ்ந்து வணங்

கினர். அவ்வாசிரியர் அவரை அன்புடன் எடுத்து ஆசி கூறி அருகே யிருத்தினர்.

கல்வி பயிற்றும் விழாவிற்கு வேண்டுவன யாவும் கடிதின் அமைக்கப்பெற்றன. ஆசிரியர், தாம் வழிபடு கடவுளை மனமொழி மெய்களான் வந்தித்து வாழ்த்தி வணங்கி, நம் பிள்ளைப்பெருமானருக்குப் பாடம் பயிற்றலாயினர். நம்பியாண்டார், தம்மைச் சூழ்ந்துள்ளோர் செவி மணக்கத் திருவாய்மலர்ந்து செந்தமிழ் பொழிந்தனர். அதனைச் செவிமடுத்த அந்தணர் பலரும் 'குழல் இனிது, யாழ் இனிது என்பர் இக்குழவியின் அமுதமொழி கேளாதவர்' என இயம்பலாயினர்.

௧௦

நம்பியின் குணநலம்

யாவும் இனிதின் நிறைவேறின. நம்பியாண்டார் குறித்தகாலம் தவருது நாள்தோறும் பாடசாலை சென்று வந்தனர். அவர்தம் தந்தையார் இரண்டொரு நாள்வரை அவரைப் பள்ளிக்கு அழைத்துச் சென்ருர். பின்னர், அண்ணலார் தம் தோழர் சமூகத்தின் துணைகொண்டு போயினர்.

நம்பியின் கமல வதனம் கண்டோர் கருத்தைக் கவருந் தன்மையது. ஆதலின், இளஞ்சிருர்கள் யாவரும் அவர்க்கு இன்னுயிர்த் தோழராயினர். நம் அருந்தவச் செல்வரின் பரந்தமுகமும், விரிந்த அறிவும், சிறந்த குணமுங் கண்ட சிறுவர் பலரும் அவர்க்குப் பணிவு காட்டி ஒழுகத் துணிவு கொண்டனர். நம் அண்ணலார் தம்மையொத்த இளஞ்சிருர்களைக்கண்டால் அன்புற அணைத்து இன்புறுவார்; தம்மினும் பெரியோரைக் காணின் பொறுமையிற் பணிந்து அருமையில் உபசரிப்பார். அவர், தாம் உண்ணும் உணவினும் உடுக்கும்

உடையினும் பிறர்க்குப் பகிர்ந்து கொடுக்கும் பான்மை வாய்ந்தவர்.

அருந்தவப் பெருந்தகையினராய நம் அண்ணலாருக்கு உயர்ந்த ஒழுக்கங்கள் யாவும் இயல்பிலேயே அமைந்து கிடந்தன. அவர் எப்பொருளைக் குறித்தும் விரையார், வெகுளார், சோம்பார், மனஞ்சலியார்; தாம் மேற்கொண்ட காரியத்தின் கண்ணே கண்ணுங் கருத்துமாய் இருந்து அதனைச் செய்து முடிப்பார். அவர் பேச்சில் வல்லவர்; பெருங்குணமும் அருஞ் செயலும் வாய்ந்த நல்லவர். அவர் கல்வியை என்றுங் கசந்ததில்லை; சுவடியைக் கண்டும் சுளித்ததில்லை. வழக்கறிதல், பாடம் போற்றல், கேட்டவை நினைத்தல் முதலிய நல்லிலக்கணங்கள் யாவும் அவரிடத்தே நிரம்பியிருந்தன. சுருங்கச் சொல்லின் அவர் அடக்கத்தின் அருங்கலம்; உண்மையின் உறைவிடம்; அன்பின் ஆருயிர்.

உறுப்பு நூலார் உவந்துரைக்கும் யாவும் நம்பியின் நளின வதனத்தே நிறைந்திருந்தன. அகன்ற நெற்றியும், கூர்ந்த நாசியும், பரந்த கண்களும் அவரது அறிவின் திறத்தைத் தெள்ளிதின் விளக்கிக் காட்டின. அழகிய நெற்றியின்கண் படர்ந்தொளிர்ந்த இரேகைகள் அவர்தம் கற்பனு சக்தியினையும் சிந்திக்கும் வன்மையினையும் வகுத்துரைத்தன.

நம் குலமகனர் தம் குழவிப் பருவத்திருந்தே பல் பொருள்களையும் கண்டு, கூர்ந்து நோக்கி, ஆழ்ந்து சிந்தித்து அகமகிழ்வு கொள்வார். அவர் நடை பழகும் பருவத்தே நிகழ்த்திய ஐயப்பாடுகள் அனைவரையும் வியக்கச் செய்தன. நம் அண்ணலாரின் ஆழ்ந்த வினுக்களுக்கு விடை யறியாது அவர்தம் தாய் தந்தையர் பல்கால் திகைத்து நின்றனர்.

அகன்ற வானத்தின் வனப்பும், அவ்வானிடை விளங்கும் விண்மீன் தொகுப்பும், காலைக் கதிரவன் காட்சியும், மாலை மதியத்தின் மாட்சியும் நம் மாதவனார் மனத்தைக் கொள்ளை கொண்டன. அவர் வெட்டவெளியின்கண் தன்னந் தனியே இருந்து தவக்குறை முடிப்பார்; பூம்பொழிலின் இடை நின்று புதுமையின் நோக்குவார்; ஓடு நீர் வெள்ளத்தின் வேகத்தை வியப்பார்; தென்றலின் மென்மை கண்டு மகிழ்வார்; ஒளியின் பொலிவு நோக்கிப் புகழ்வார்; இசையின் இனிமை கண்டு இன்புறுவார்.

நம் தெய்வத் திருமகனார் தம் இளம் பருவத்திருந்தே பொல்லாப் பிள்ளையாரின் பொன் மலரடிகளைப் பணியும் புண்ணியம் பூண்டிருந்தார். அவர் காலையும் மாலையும் அப் பெருமான் ஆலயம் சென்று ஆர்வ மீதூர அவரை வலம் வருவார்; தாமரை அனைய தம் கைகளால் தாடைகளில் அறைந்து கொள்வார்; சிரங்குலுங்கக் கரங்கொண்டு நெற்றியில் பன் முறை குட்டிக் கொள்வார்; கைம்மலர் சிவப்பத் திருச்செவி துவளக் கணக்கின்றித் தோப்புக்கரண மிடுவார்; உடல் குழைய, உரோமம் புளக, உச்சிமேல் கைகுவித்து உவகை பூப்பார்; நாத்தழும்பேறத் தீந்தமிழ்ப் பாக்கள் நயந்து பாடுவார்; நினைந்து நினைந்து, நெஞ்சுருகி நிற்பார்; போற்றிப் புகழ்ந்து புவிமிசை விழுந்து பொற் பதம் பணிவார்.

கக

மனநிலையின் மாண்பு

காரையூர் நம்பிக்குப் பார்க்கும் பொருளெல்லாம் அப் பரமன் வடிவாகவே விளங்கின. பொல்லாப் பிள்ளையாரின் புகழ்மொழியே நம் பெருந்தகையாரின் பொன்மொழியாகப்

பொலிந்தன. இருக்கினும், நிற்கும்போதும், இரவு கண்துயி லும்போதும், இருக்கைவிட் டெழும்பும்போதும், நம்பி அத் தும்பிமுகவன் தாளிணையே தஞ்சமெனக்கொண்டு தொழுது வருவார்.

அருந்தவக் குறையினை ஆற்றவந்த நம் பெருந்தகையா ரின் தந்தை பூசனை புரியவேண்டிப் பொல்லாப் பிள்ளையாரின் ஆலயத்திற்கு நாள்தோறும் நியமந் தவறாது சென்றுவருவார். அக்காலத்து நம் அண்ணலார் தம் தந்தையின் தவப்பேறு கண்டு களிகூர்வார்; அப்பெருமானைப் பூசிக்கும் புண்ணியம் தமக்கு எப்போது வாய்க்குமோ என எண்ணி ஏங்குவார்; 'அவரை அன்புற அணைத்து இன்புறாத கைகள் அவலமே' என ஆர்வமிகுதியால் அரற்றுவார்; அவரது வண்ண வடிவழ கைத் தம் உள்ளக் கிழியில் பன்முறை எழுதிப் பார்த்து இன்புறுவார்.

திருநாரையூரின் திலகமாய்த் திகழும் நம்பெருமகனா ரின் உள்ளப் பொலிவினைத் தெள்ளிதின் எடுத்துரைக்க எவ ராலும் இயலாது. அவர் பித்தர்போன்று பலப்பல பிதற்றிய துமுண்டு; ஊமரொத்து வாளா விருந்ததுமுண்டு. அவர் பெரும் பேயர்போல் பல்லிடங்களிலுந் திரியினுந் திரி வர்; அறிவிற் பெரியோரென்ன அடங்கி யொடுங்கி இருப்பினும் இருப்பர். அவர் காரணமின்றிக் கொல்லென நகைப்பர்; தேம்பித் தேம்பித் திடுமென அழுவர்; உயிரின் உண்மை இலக்கணம் யாதென உன்னுவர்; இறைவன் தண் ணருள் வண்ணம் தெளிந்திட விழைவர்; பிறப்பின் பெருமை கண்டு புகழ்வர்; இறப்பின் எல்லை காணாது ஏங்குவர்.

அக்காலத்து நம் அண்ணலாரது அளப்பருந் தன்மை யினை ஆங்குள்ளார் ஒருவரும் உள்ளவாறு உணர்ந்திலர்.

அன்னையும் தந்தையும் ஆருயிர்த்தோழரும் அவர் தம் அறிவின் ஆற்றலையும் ஒழுக்கத்தின் உயர்வினையும் கண்டு களித்தனரே யன்றி, இறைபவனிடத்து எதிரிட்டோடும் அவரது எல்லை யில்லா அன்பின் பெருக்கினையும் தத்துவ மெய்ஞ்ஞான நிலையினையும் ஒரு சிறிதும் உணர்ந்தா ரில்லை.

கஉ

தந்தையும் தனயரும்

சில பகல் சென்றன. பிறைமதியென்ன நம்பி நாளும் நாளும் பொலிவு பெற்றுத் திகழ்ந்தனர். பெற்றோர்கட்கும் உற்றோர்கட்கும் நம் அண்ணலாரிடத்து அன்பு மேலும் மேலும் முறுகி வளர்ந்தது. அருளின் நிலைக்களனுய நம் ஐயனுர் அழகின் கொழுந்தென உடல் வளமுற்று ஓங்கித் திகழ்ந்தனர். கல்விக்கழகத் தலைவராய கணக்காயனுரும் நம்பியின் நுண்ணறிவினையும் நூலறிவினையுங் கண்டு வியப்பெய்தினர். அண்ணலார் தம் ஆசிரியரிடத்தே பொச்சமில் அன்பும், அச்சமும், பணிவும் காட்டிக் கடப்பாட்டின் ஒழுகிவந்தனர்.

மாசு மறுவற்ற ஒருநாள் மாலை—நாழிகை முப்பதுக்கு மேல் ஆயிற்று; கதிரவன் மேற்குத் திசையின்கண் முற்றிலும் மறைந்தனன்; வானத்தின்கண் இடையிடையே விண்மீன்கள் விட்டுவிட்டு மின்னலாயின; பசும் பொழிலூடே புதுமதியம் பொற்பங்கெனப் பொலிவுகொண்டெழுந்தது. நம் தவச்செல்வரின் தந்தை, பெருமான் பூசை முடித்துத் தம் இல்லத்தின்கண் ஒரு புறத்தே அமர்ந்து, யாதோ ஒன்றினைக் குறித்து ஆழ்ந்து சிந்தித்தவண்ணம் இருந்தனர். நம்பியாண்டார் நறுநெய் பெய்த திருவிளக்கருகே சுவடி அவிழ்த்துச் செந்தமிழ் பயில லாயினர்.

இங்ஙன் இரண்டொரு நாழிகை கடந்தன. கல்வியில் கருத்தூன்றி யிருந்த நம் செல்வர் ஒரு சிறிது ஓய்வுற்றுத் தலை நிமிர்ந்தனர். அதுபோழ்து பல்வகைச் சித்திரான்னங் களின் நறுமணம் யாக சாலையினின்றும் கம்மெனக் கமழ்ந் தது. அதுகண்ட நம்பிள்ளைப் பெருமான் வியப்பெய்தி முற் றத்தின்கண் மெல்ல வந்து நின்றனர்.

அங்கே மூட்டையும் முடிச்சும் வரிசையின் வைக்கப் பட்டிருந்தன; ஏவலாளர் அங்கும் இங்கும் ஓடிப் பண்டங் கள் பல கொணர்ந்து வண்டியில் ஏற்றுவாராயினர்; அருமை யின் மிக்க அவர்தம் அன்னையார் தம் வீட்டு வேலைகளை விரைவிற் புரியலாயினர். இவைகளைக் கண்ட நம் ஐயருக்கு ஐயம் பெரிதாயிற்று. ஆதலின், அவர் சிந்தனையில் ஆழ்ந் திருந்த தம் தந்தையார்பால் விரைந்து சென்றனர். தம் மைந்தன் வரவு கண்ட அத்தாதையாரும் கவற்சி நீங்கித் கவின் முகங் காட்டினர்.

"எந்தையே, இன்று நடைபெறுவன யாவும் எனக்குப் புதுமையாய்த் தோன்றுகின்றன; இந் நிகழ்ச்சிகட்குக் கார ணம் யாது?"

"கண்மணி, யானும் இதுபோழ்து நின்னையே நினைந் தேன்; நீயும் கதுமென என்முன் வந்து நின்றனை. ஆத லின் நினக்கு ஆயுள் பெரிதும் வளர்க; அரனருள் இனிதின் இலங்குக."

"அருமைத் தந்தையே, ஆனந்தம். இச்சிறியேன் வரவினைத் தாங்கள் விழைந்ததின் காரணம் யாதோ?"

"என் செல்வக் குழந்தாய், இவண் வந்தமர் வாய். நம்பெருமானுக்குப் பூசை புரிய நின்க்கு விருப்பம் உளதோ?"

"அன்பின் மிக்க தந்தையே, அதனினும் வேறு ஆனந்தம் உண்டோ! அப்புண்ணியம் அடியேன் பெறுவேனேல் புனிதனுயினேன். அப்பா, அப் பெறலரும் பேற்றினைப் பெறுவான் வேண்டியே, நம்பெருமானை நான் நாள்தோறும் போற்றிவருகின்றேன். எந்தையே, என் உள்ளக் கருத்தினைத் தாங்கள் எவ்வாறு உணர்ந்தீர்கள்? அப்பெருந்தவம் இன்றே பலித்தது போலும்."

"அருமைக் கண்மணி, என் அருகே வருவாய். நின் அருங்குணங் கண்டு நான் அகமகிழ்கின்றேன். என் செல்வமே, நின் வண்ண வதனமே நினது எண்ணம் காட்டும். எனினும், குழந்தாய், மிகச் சிறுவனுய நினக்குப் பூசனை முறைகள் எவ்வாறு தெரியும் என நான் ஐயுறுகின்றேன்."

"நற்றவத் தந்தையே, தாங்கள் எம்பெருமானுக்குப் பூசனை புரியுங் காலத்தெல்லாம் இச்சிறியேன் உடனிருந்தனனன்றே? ஆதலின், அடியேன் அதனை ஒருவாறு அறிந்துள்ளேன். அன்றியும், எந்தாய், தங்கள் துணைவலியும் நம்பெருமான் அருட்பொலிவும் கொண்டு அடியேன் அதனை முட்டின்றி முடிக்க அவாவுகின்றேன். தங்கள் திருவுள்ளம் யாதோ அறிகிலேன்."

"மாசறு மணியே, நின் மனப் பாங்கு கண்டு பெரிதும் மகிழ்கின்றேன். எனினும், என் செல்வமே, நீ எண்ணிய வண்ணம் நான் நாளை ஈண்டு இருத்தல் இயலாது. இன்று இரவே நான் அயலூர் தன்னை அடைதல் வேண்டும். என்னருங் குழந்தாய், நான் பன்னெடுங் காலம் பரிவொடு புரியும் இப்பெருமான் பூசைக்கு இடையூறு நேர எங்ஙனம் சகிப்பேன். யான் செய்தவக் குறைவோ! என் தீவினைப் பயனே!

இத் திருப்பணி புரியுந் திருவுடை அந்தணர் ஒருவரும் காணேன்; ஆதலின் அன்பே, அருந்தவமணியே, இப்புண்ணியச் செயலை நீயே புரிகுவாய். அண்ணலார் திருவருள் ஆணையீதாயின் இயம்புதற்கு என் உளது?''

''ஆ! அப்பா, ஆனந்தம்; ஆனந்தம்! எந்தையே, இஃது உண்மைக் கூற்றோ அல்லது சோதனைதானோ!''

''யாவும் உண்மையே! ஆதலின், குழந்தாய், நீ காலையில் எழுந்து கடிமலர் பறித்துக் கடவுளர் பூசை கருத்தொடு புரிக; முக்கனி சர்க்கரை முறைபெறப் படைத்தே தூப மூட்டித் தீபங் காட்டுக. பன்முறை பார்த்துப் பழகிய நினக்கு மேலும் மொழிதல் மிகையே. ஆதலின், என் அன்பே, நீ பொல்லாப்பிள்ளையாரின் பதமலர் பணிந்து, புண்ணியமும் புகழும் பெற்றுப் பொலிவுற்று வாழ்வாய்.''

கரு

தந்தை பிரிவு : தனயர் நிலை

நம்பியின் அருமைத் தந்தை அன்று இரவே நாரையூரினின்றும் நீங்கினர். தந்தையைப் பிரிந்தறியாத நம் தவச்செல்வர் முதலில் சிறிது தயங்கினர். பின்னர், அப்பெருந்தகையார், பெருமான் பூசையின்கண் வைத்த பேரன்பினால் அதனை அறவே மறக்கலாயினர். நம்பியின் சுந்தர வதனம் அன்று, அப்போதலர்ந்த செந்தாமரையினும் விஞ்சியொளிர்ந்தது. அவர்தம் உள்ளத்தில் இன்ப வெள்ளம் பொங்கித் ததும்பித் திகழாநின்றது. பிள்ளையார் கோயிலும் பெருமான் திருவுருவும் அவரது கண்களில் நின்று காட்சி தந்தன. ''நான் எப்போது என் பெருமானைக் காண்பேன்; கட்டித் தழுவுவேன்; உள்ளங் குளிருவேன்; உவகை

கொள்ளுவேன்'' எனப் பன்முறை அவர் பித்தர் போன்று பிதற்றலாயினர்.

நடுச்சாமம் நண்ணியது; வானத்தின் உச்சியில் வெண் ணிலவு விளக்கமுறத் திகழலாயிற்று. அப்போது மரங் களும் அசைந்தில; ஆந்தையின் அரற்றலும் அடங்கியது; ஊழியின் இறுதிக் காலம் போன்று ஊர் முற்றிலும் ஒலியவிந்து கிடந்தது.

பேயும் உறங்கும் அப்பேரிரவில் நம் பிள்ளைப்பெருமான் சிறிதும் துயின்றாரில்லை. அவர், தம் பஞ்சணையில் சாய்ந்த வண்ணம் பூசை புரிதலின் நிமித்தம் பலப்பல எண்ணுவா ராயினர்: "நான் என் ஈசனருக்கு எத்தகைய மலர்களைக் கொய்வேன்! எங்கே சென்று எவ்வாறு பறிப்பேன்! அவைகளை எவ்விதம் மாலை தொடுப்பேன்!'' எனச் சிறுபோது சிந்தித்தனர், "ஆ! நாளை நான் என் பெருமானைப் பூசிப் பேன் அல்லவா! கட்டித் தழுவி நேசிப்பேன் அல்லவா! இஃதென்ன ஆச்சரியம்!'' எனச் சிறுபோது வியந்து மகிழ்ந் தார்; "ஐயோ! இன்னமும் பொழுது புலர்ந்திலதே! கதிரவன் காட்சி தந்திலனே! சேவலும் கூவ நினைந் திலதே! ஓ நான் என் செய்வேன்'' எனச் சிறுபோது ஏங்கி இளைத்தனர்.

கச

கனவோ—நினைவோ!

நம் மாதவனார் இவ்விதம் பலப்பல நினைந்து முடிவில் தம்மையும் அறியாது ஒரு சிறிது கண்வளர்வாராயினர். இவ்வாறு துயில் கொண்ட சிறிது நேரத்திற்குள் நம் செல் வர், பொழுது புலர்ந்து நெடுநேரம் சென்றதாக உணர்ந்தார்.

ஆதலின், அவர் படுக்கை விட்டுத் திடுக்கென வெழுந்து விழித்துப் பார்த்தனர். கதிரவன் பட்டப் பகலென உச்சியில் நின்று ஒளிர்தலைக் கண்டார். "ஆ!. நான் பாவி இதுகாறும் உறங்கி யொழிந்தேனே ! என் பெருமான் என் வருகை காணாது வாடியிருப்பாரே! மலர்கள் யாவும் மண்ணில் வீழ்ந்து மாசுற்றிருக்குமே! அந்தோ! நான் யாதுபுரிவேன்?" எனப் பற்பல இயம்பித் துன்புற்று, நம் அண்ணலார் பூப் பறிக்கும் புட்டிலோடு பூம்பொழிலை நோக்கி விரைவின் ஓடினார். அவர் அவ்வாறு செல்லுங்கால் தம் பாதம் தரையில் அழுந்தாமை கண்டு பெரிதும் வியப்புற்றார். பின்னர், நம் மாதவனார் மரங்களின் உச்சியின் மீதும், மலைச்சிகரங்களின் மீதும் தாம் கால்வைத்து நடப்பதாகவும், இவ்வதிசயங் கண்டு மக்கள் யாவரும் தம்மைச் சுட்டிக் காட்டி ஏதேதோ பேசிக் கொள்வதாகவும் உணர்ந்தார். சிறிது நேரத்திற்குள் அவர் பல பொழில்களையும், மலைகளையும், ஊர்களையும், பாலைவனங்களையும், ஆறுகளையும், கடல்களையும் கடந்து தாம் அந்தரத்தே உயர எழும்புதலை உணர்ந்து சொல்லொணா உவகையில் ஆழ்ந்தார்.

நம் அருந்தவச் செல்வர் அவ்விதம் செல்லுங் காலத்துத் தாம் அதுகாறும் கேட்டறியாத இனிய கீதங்கள் பல எழும்புதல் கேட்டு மகிழ்வாராயினர்; தம் தேகம் முன்னினும் பன்மடங்கு வனப்பு மிகுந்து மிக மேன்மை வாய்ந்து ஆகாயத்தின்கண் மிதந்து செல்லுதல் கண்டு மிகுதியும் களிப்பாராயினர்.

சிறுபோது சென்றது; நம் சிறிய பெருந்தகை அந்தரத்தே அதியற்புதமாய்த் தோன்றிய ஒரு சுந்தர வனத்தை அடைந்தனர். எழிலுற்று விளங்கும் அப்பொழிலின்கண்

நறுமணம் நாற்புறமும் வீசாநின்றது. நம் நாரையூர் நம்பி அப்பூம்பொழி லூடே விருப்பின் விரைந்தோடினர். ஆங்கே கொத்துக் கொத்தாய்த் திகழும் கொன்றையும் தும்பையும், கோங்கும் குரவமும், பாதிரியும் சண்பகமும் நம் அண்ணலார் உள்ளத்தை மகிழச் செய்தன. நம் அன்பர் அவைகளை அவாவுடன் பறித்துப் பறித்துத் தம் பூக்குடலில் நிரப்பலாயினர்.

சிறிது நேரத்திற் கெல்லாம் நம் அருந்தவர் நின்றிருந்த அப் பெரும் பொழில் எழுநிலை கொண்ட அழகு மிக்க ஆலயமாக மாறியது. அது கண்ட அத்திருமகனுர் வியப்புங் களிப்பும் ஒருங்கே எய்தினுர்; அக்கோயிலின் உட்புறம் செல்ல உவந்தோடி நாற்புறமும் நாடுவாராயினுர். அதனைப் பன்முறை வலம் வந்தும் நம் வரதர் வழியறியாது பெரிதும் விழித்தனர். பின்னர், முற்றிலும் இருண்ட சிறுவாயில் ஒன்று அவர் கண்ணுக்குப் புலனுயிற்று. இறைவனைக் காணவேண்டு மென்னும் அவாவினுல் நம் அண்ணலார் அச்சிறுவாயிலில் சிறிதும் அச்ச மின்றி அக்கணமே நுழைந்தார். ஆங்கு அவர் கண்ட அதிசயத்தை என்னென் றியம்புவது! ஆயிரங்கோடிச் சூரியர்கள் ஒன்று சேர்ந்து ஒளி வீசிய தொத்து அவ்வாலயம் மிளிர்வதாயிற்று. அவ்வாலயத்தின் நடுவே பொற்பீடம் ஒன்று பொலிவு பெற்றிலங்கியது. அதன் இடையே நான்கிதழ்கள் வாய்ந்த ஓர் அரும்பெறற் கமலம் அழகுற் றொளிர்ந்தது. பேரெழில் பெற்ற அப் பொற்றாமரையின்கண் பொல்லாப் பிள்ளையார் மின்னெனப் பொன்னொளி காட்டி நம் பெருமகனுர்க்குக் காட்சி தந்தனர்.

அவ்வற்புதங் கண்ட அண்ணலார், இன்பவெள்ளம் பொங்கி எழ அவ்வெழி லுருவைக் காதலால் கட்டித் தழுவக்

கடிதின் ஓடினர். அக்கணமே அத்திருவுருவம் அருவுருவம் ஆயிற்று. அதுகண்ட அண்ணலார் அகம்நொந்து அசைவற்று நின்றனர்; இறும்பூதுற்று ஏங்கி இளைத்தனர்; பல்லிடத்தும் ஓடித் தேடி அலைந்தனர்; நெடிது நினைந்து விம்மி விம்மி வருந்தினர்; முடிவில் யாதுந் தோன்றப் பெறுராய்க் 'கோ' வெனக் கதறி நிலத்தில் குப்புற விழுந்தனர். விழுந்த அக்கணமே நம் அண்ணலார் கண் விழித்துப் பார்த்தனர்; தாம் பஞ்சணைமீது படுத்திருத்தல் அறிந்து "இஃதென்ன! கனவோ நினைவோ!" என ஐயுற்று விரைந்தெழுந்து நாற்புறமும் வியப்பின் நோக்குவா ராயினர்.

கரு

அண்ணலார் புறப்பாடு

நம் அருந்தவப் பெருந்தகையார் தம் பள்ளியறை நீத்து வெளியே வந்தனர். அதுபோது பொருக்கெனப் பொற்கோழி கூவிற்று; 'கா' வெனக் காக்கை கரைந்தது; பிற புள்ளினங்கள் பண்மிழற்ற லாயின; முழுமதியம் மேற்கே மெல்லெலன மறைவ தாயிற்று; கிழக்கு வெளுத்துக் கவின் முகங் காட்டிற்று. அதுகண்டு அண்ணலார் அகமகிழ்ந்தனர் காலைக் கடன்களைக் கடிதின் முடித்தனர்; வெண்ணீறதனை விருப்பிற் பூசினர்; வேழமுகத்தோன் விரைகழல் வாழ்த்தினர்; கடிமலர் கொய்யப் பூம்பொழில் நோக்கிப் பொற்புற நடந்தனர்.

பொழுது நன்கு புலர்தற்குள் நம் புண்ணியனுர் பூம்பொழிலை நண்ணினுர். ஆங்குக் குயில்கள் கூவி மகிழ்ந்தன; மயில்கள் மாநடம் புரிந்தன; தென்றல் மெல்லெனை வீசி மகிழ்ச்சி தந்தது. ஆங்குள்ள மரங்களும் செடிகளும் நம்

மாதவனாரின் நல்வரவு கண்டு பணிந்து போற்றின; பெரு முகை காட்டி முறுவல் செய்தன; இளந்தளிர்க் கரங்களால் எழில் வரவேற்றன. அப்போது நம் பெருமான் உளந் தழைத்து நகையரும்பி முகமலர்ந்தனர்.

வரிவண்டு வந்து மொய்க்குமுன் நம் வரதர் கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ என்னும் நால்வகை மலர்களையும் பொழுதொடு சென்று பறித்துப் பூக்குடலில் பொற்புற நிரப் பினர். அது போழ்து நம் பிள்ளைப்பெருமான் அடைந்த உள்ளக் களிப்பினை யாவரே எடுத்து உரைக்கற்பாலர்!

சிறுபோது சென்றது. நம் ஏந்தலார் இல்லம் திரும்பி னர். அவர் தம் உள்ளத்தினின்றும் பொங்கித் ததும்பும் பேருவகை போன்று பூக்குடல் நறுமலர் கொண்டு நிரம்பி வழிந்தது. நம் அண்ணலாரின் அருமை அன்னையார் அம்மலர் களைக் கண்டு மகிழ்வு பூத்தனர்; கண்ணியும் மாலையும் கவின் பெறப் புனைந்து தம் காதல் மைந்தரின் கரத்தே நல்கினர்.

பெருமான் பூசைக்கு வேண்டுவன யாவும் இனிதின் அமைந்தன. அண்ணலார் ஆலயம் செல்லப் புறப்பட்டார். ஞானவொளி வீசும் நம்பியின் நளின வதனம் போன்று காலைக் கதிரவன் பேரொளி காட்டிப் பொலிவுபெற் றெழுந் தனன். நம் அருந்தவச் செல்வரின் அன்பினை யொத்து அகன் றொளிரும் பெருவானம், அன்று அவர்தம் இன்ப எழில் மனம் போன்று மாசு மறுவற்று மாண்புறத் திகழ்ந்தது.

கசுா

பொல்லாப் பிள்ளையார்

நம் குலமகனார் கோயிலுக்குச் செல்லுங்கால் எதிர்ந்த நற்சகுனங்கள் எண்ணுதற்கரியன. எனினும், அவர் அவைக

ளைச்சிறிதும் கருதினாரில்லை. பெருமானைக்காண வேண்டுமென்னும் பேரவா அவரது அகத்தினின்றும் பொங்கியெழுந்தது. அவர் எண்ணமெல்லாம் அப்பெருமானின் வண்ண வடிவழகில் ஈடுபட்டிருந்தது. ஆதலின், நம் அருந்தவச் செல்வர், அளவு கடந்த அன்பினால் உந்தப் பட்டு ஆலயம் நோக்கி அதிவேகமாய் நடந்து சென்றார்.

சிறிது நேரத்திற்குள், பிள்ளையார் கோயில் நம் அண்ணலார் கண்களுக்குப் புலனாயிற்று. அதுபோது அவருக்கு உண்டான உவகைப் பெருக்கினை ஒருவராலும் உரைக்க ஒண்ணாது. அவர் கோயிலைக் கண்டதும் குதூகலித்தார்; உடல் வியர்த்தார்; உரோமம் சிலிர்த்தார்; உவகை மிகுதியால் துள்ளிக் குதித்தார். அப்பெருமான் திருவுருவே ஓர் ஆலயமாய்ப் பொலிவுற்றுத் திகழ்வதாக நம் ஏந்தலார் எண்ணினார்.

அண்ணலார் ஆலயம் நண்ணினார். ஆ! அவரது அன்பின் அளவினை என்னென்றியம்புவது! அஃது எல்லையின்றிக் கரைபுரண்டோடியது. அவர் உள்ளம் அழலிடைப்பட்ட மெழுகுபோல் உருகியது. கண்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தன; உடல் பூரித்தது; வதனம் பொற்றாமரையொத்துப் பொலிவுற்று விளங்கியது.

அருகே சென்றதும், நம் புண்ணியப் பெருந்தகையார் பொல்லாப் பிள்ளையாரின் திருவுருவை அகங் களிக்கக் கண்டு மகிழ்ந்தனர்; காதலால் ஓடிச் சென்று கட்டித் தழுவினர்; வாயார வாழ்த்தினர்; மனமார வணங்கினர்; தோப்புக்கரண மிட்டனர்; 'பளீர் பளீர்' எனத் தாடைகளில் அறைந்து கொண்டனர். பின்னர், நம் அருந்தவச் செல்வர் கணபதியைக் காதலின் நோக்கி, "ஆ என் பெருமானே,

ஈசனே, இறைவனே, நான் செய்த புண்ணியம் யார் செய்தார்? என் பெருந்தவம் இன்றே பலித்தது; என் தீவினை இன்றே தொலைந்தது. என் அண்ணலே, ஆனை முகி வள்ளலே, என் அருமைத் தந்தையின் கருணையால் நான் தங்களைப் பூசிக்கும் பெரும்பேறு பெற்றேன். ஆதலின், ஐயனே, அழகனே, என் மெய்யனே, நான் புரியும் பூசையினில் குறைகாணாது, குற்றம் நோக்காது, அதனை மகிழ்வின் ஏற்று மனங்களித்தல் வேண்டும்'' எனக் குறை இரந்து வேண்டி அப்பெருமானின் பொற்பாத கமலங்களில் பன்முறை விழுந்து விழுந்து பணிந்தனர்.

கஎ

பூசனை புரிதல்

அண்ணலார் ஆலயம் அடைதற்குள் பூசைக்கு வேண்டுவன யாவும் பணியாளர் கொணர்ந்து வைத்தேகினர். ஆதலின், நம் நாரையூர் நம்பி ஐங்கரத்தோற்கு ஆசைதீரப் பூசை புரியலாயினர்.

நம் புண்ணியனார் பூசனை புரியுங்கால் இடையிடையே புகன்ற அன்பு மொழிகளும், புரிந்த இன்பச் செயல்களும் அளப்பில. அவர் அத் திருவுருவை நறுநெய் கொண்டு பரிவில் துடைத்தனர். பாலபிஷேகம் புரிந்து மகிழ்ந்தனர்; தேனபிஷேகம் திகழச் செய்தனர்; மஞ்சனமாட்டி மகிழ்விற்கண்டனர். பின்னர், அவர், "தெள்ளிய தேனே, தீம்பாலே, தெவிட்டாத கற்கண்டே, தித்திக்கும் செங்கரும்பே" எனப் பலப்பல இயம்பி அப்பெருமானைக் காதலால் கட்டித் தழுவிக் களிகூர்ந்தனர்.

அபிஷேகம் யாவும் இனிதின் முடிந்தன. பின், நம் பெருந்தகையார் அப் பரம்பொருளை ஆடையாபரணங்களால் அலங்கரித்து அழகு பார்த்தனர்; அப்பெருமானுக்குத் திருநீறுசாற்றித் திலக மிட்டுக் களித்தனர்; கொன்றைமாலையைக் கோதற அணிந்து மகிழ்ந்தனர்; தும்பைத் தாரினைத் தூய்மையின் அமைத்து வியந்தனர்; கூவிளந் தளிரும், கோங்கெழின் மலரும் குலவவைத்துக் குதூகலித்தனர். பின்னர், நம் அண்ணலார் அவரது வண்ண வடிவழகைப் பார்த்துப் பார்த்துப் பரமானந்த முற்றனர்.

அலங்காரம் அனைத்தும் அழகுற அமைந்தபின், நம் அன்பர் வேழமுகத்து விநாயகப் பெருமானுக்கு நிவேதனப் பொருள்கள் யாவும் நேர்மையின் வைத்து உவகை பூத்தனர்; தீபம் ஏற்றித் தூபம் காட்டினர்; பச்சிலை பலவும் பரிந்து சாற்றினர்; கைதொழு தேத்திப் போற்றினர்; நிலமுறப் பணிந்து விழுந்தனர்.

இவை யாவும் முடிந்தபின் அண்ணலார் ஐங்கரத்தோன் அருகே சென்று "அழகொளிர் ஈசனே, ஆனந்த வள்ளலே, அற்புதப் பெருமானே, தங்கள் எழில் நலம் இருந்தவாறு என்னே என்னே! என் ஐயனே, இதோ கண்ணாடி கொணர்ந்து காட்டுகின்றேன்" என்று சொல்லி ஆர்வத்தால் விரைந் தோடிக் கண்ணாடி கொணர்ந்து காட்டி மகிழ்வெய்தினர். பின்னர், "ஆ! என்ன மதியீனம், என் ஆண்டவனே ஆனந்தத்தாண்டவனே, அழகனே, நான் தங்களுக்குச்சிவிறி கொண்டு வீசினேனில்லை; திருக்குடை பிடித்துத் தருக்கினேனில்லை; வெண்சாமரையும் இரட்டினேனில்லை. அந்தோ! நான் பாவி! என் ஈசனே, இறைவனே, நான் இதோ செல்கிறேன்; யாவும் இதுபோதே கொணர்கின்றேன்; தங்கள்

அருங்களைப்பை ஆற்றுகின்றேன்; பெருங்களிப்பை ஊட்டு கின்றேன்'' என்று ஆராமையிற் கூறிக் கடுகிக் கொணர்ந்து சிவிறி வீசினர்; திருக்குடை நிழற்றினர்; சாமரை இரட் டினர்.

கஅ

திருவமுது படைத்தல்

பொல்லாப் பிள்ளையாருக்கு நம் அன்பர் புரிந்த உபசா ரங்கள் மிகப்பல. அவர் அவ்வாறு புரியுங்கால் தம்மை மறந் தனர்; பரன் வயப்பட்டனர்; அன்பிற் சிறந்தனர்; இன்பில் திளைத்தனர். அன்றியும், அவர் ஆர்வ மிகுதியால் ஆடினர், பாடினர், அரற்றினர்; பித்தர் போன்று பிதற்றினர், திகைத் தனர், சிரித்தனர்; அப்பெருமானின் திருவுருவத்தைத் தொட்டு மகிழ்ந்தனர்; களிப்பால் தட்டிக் கொடுத்தனர்; காதலால் அவரைக் கட்டியணைத்து முத்தமுந் தந்தனர்.

இங்ஙனம் அன்பால் பலப்பல புரிந்து மகிழும் நம்பெரு மகனாரின் திருவதனம் திடுமென மாறியது; அதுபோதே அவர் "அந்தோ! ஈசா! நான் கெட்டேன் கெட்டேன். என் சுவாமி, என் இறைவே, நான் பாவி, சண்டாளன்; தங்களுக் குத் திருவமுதூட்ட முற்றிலும் மறந்தேன் மறந்தேன்" என்று வாய்விட்டு அரற்றிய வண்ணம் நிவேதனத் தட்டைக் கையில் ஏந்தியவராய் விநாயகப்பெருமான் அருகே நின்று, "என் அன்பே, அமுதே, இன்பே, இறையவனே, தாங்கள் மிகுதியும் பசித்திருப்பீர்கள். அந்தோ! தங்கள் அழகிய திரு மேனி இளைத்து விடுமே! தங்கள் அற்புதப் பொலிவனைத்தும் மாறிவிடுமே! ஆ ஈசா ஈசா! அடியேனை மன்னியுங்கள் மன்னி யுங்கள். தங்கள் மீதுள்ள ஆசையால் அதனை நான் அறவே

மறந்தேன். அழகின் கொழுந்தே, ஆர்வப்பெருக்கே, தங்கள் எழில் நல வெள்ளத்தில் ஈடுபட்டு நான் அனைத்தையும் மறந் தொழிந்தேன். ஆதலின், என்கண்ணே, மணியே, பொன்னே, புகழே, என் பிழையினைத் தாங்கள் தயைகூர்ந்து மன்னியுங் கள்; எளியேன் மீது அருள் கூர்ந்து இதனை அமுது செய்யுங் கள்" என்று கூறிப் பன்முறையும் வேண்டினர்.

இங்ஙனம் தாம் பலவாறு கூறியும், சிலையுருவாய் அமர்ந் துள்ள அப்பெருமான் சும்மா விருத்தல் கண்ட நம் அண்ண லார், "விநாயகனே, வேழமுகப் பெருமானே, என்னே தாங் கள் வாளா விருக்கின்றீர்கள்! அமுது செய்யுங்கள் அமுது செய்யுங்கள். அந்தோ! நான் காலம் தாழ்த்து அமுது படைத்தேன் என்று கோபமோ? ஆ! சுவாமி, அஃது என் பிழையே; மிகப்பெரும் பிழையே. எனினும், அண்ணலே, அதன் காரணத்தை நான் முன்னரே மொழிந்தேனன்றே? ஆதலின், என் ஐயனே, அன்பே, பெறலரும் பாக்கியமே, என் பெரும் பிழை பொறுத்துத் திருவமுது கொள்ளுங்கள். நான் தங்களுக்குத் தோப்புக்கரணங்கள் எத்துணைக் கேட்பி னும்இதுபோதே இடுகின்றேன்; ஆயிரம் வேண்டினும்தாடை யில் தடையின்றி அறைந்து கொள்கின்றேன்; தலையில் எண் ணிக்கையின்றிக் குட்டிக் கொள்கின்றேன்; நிலத்தில் விழுந்து விழுந்து பணிகின்றேன்; கரங் கூப்பிச் சிரம் வணங்கித் தொழுகின்றேன். என் சுவாமி, என் ஈசா, இறை யவனே, தயை செய்யுங்கள், தயை செய்யுங்கள்" என்று வருந்திப் பற்பல கூறித் தாம் இயம்பியவாறே தண்டம் பலவும் இடுவாராயினர்.

நம் பிள்ளைப்பெருமான் இங்ஙனம் நெடிது முயன்றும் அப்பொல்லாப்பிள்ளையார் பேசாதிருந்தனர். சிலை யுருவிற்

குச் செயலு முண்டோ? ஆதலின், அத்திருவுருவம் என்றும் உளதேபோல் அன்றும் அசைவற்றுக் கிடந்தது. ஆனால், நம் அருந்தவக் குழந்தை இதனை அறிந்தாரில்லை. ஆலயப் பிள்ளையார் நம்போல் அமுது செய்துவப்பார் என அவர் எண்ணினர் போலும்! அன்றேல், அச்சிலையுருவே நம் அன்பர் கண்களுக்கு அருளுருவாய்த் தோன்றி யொளிர்ந்தது போலும்! அதனை யாவரே அறிவார்? ஆதலின், அஃது எங்ஙனமேனும் ஆகுக. நம் அண்ணலார் எண்ணத்திற்கு அத்திருவுருவம் ஒரு சிறிதும் இசைந்திலது. அது கண்ட நம் அருந்தவச் செல்வர், அகம் நொந்து, "ஓ என் பெருமானே, அமரர் கோமானே, தாங்கள் இவ்வாறு செயலற்று இருத்தலின் காரணந்தான் யாது? தயை செய்து இப்போதே உரைத்தருளுங்கள். சுவாமி! நான் தங்களைத்தான் கேட்கிறேன். என்ன பேசாதிருக்கிறீர்கள்? திருவாய் திறந்து உடனே உரைத்தருளுங்கள். தங்களுக்கு என்மீது யாது வருத்தம்? அடியேன் தங்களுக்கு இன்னும் என்னென்ன பிழை புரிந்தேன்? அவைகளின் பொருட்டு அடியேன் இதுபோது யாது புரிதல் வேண்டும்? அதனையேனும் தயைசெய்து இயம்புங்கள்.—அந்தோ! இஃதென்ன துன்பம்— என் ஈசன் மோன விரதம் பூண்டனரே! நான் இதற்கு யாது செய்வேன்! என் பெருமான் கோபத்தை எவ்வாறு தீர்ப்பேன்!" என்று கூறிப் பலபல சிந்தித்துச் சிறிதே திகைத்து நாற்புறமும் நோக்கினர்.

உடனே, நம் அண்ணலார் முகத்தில் உவகை பூத்தது. அவர் அப்பெருமானை நோக்கி, "சுவாமி, தாங்கள் உண்ணாது வாளா விருத்தலின் காரணம் இதுபோது தான் எனக்குத் தெரிய வந்தது. என் தந்தை தங்களுக்குத்

திருக்கதவம் மூடியன்றோ அமுதூட்டல் பழக்கம்! ஆம், ஆம். அஃது எனக்கு இதுகாறும் விளங்காது போயிற்றே! அதனால்தான் தாங்கள் திருவமுது கொள்ளவில்லை" என்று சொல்லிய வண்ணம் விரைந்து சென்று அவ்வாலயத்தின் உட்புறக் கதவை அழுந்தச் சாத்தினார்.

அவ்வாறு புரிந்ததும், நம் அருந்தவர் ஆனைமுகனார் அருகே ஓடி வந்து, "சுவாமி, நானும் அவ்விதமே செய்து விட்டேன். தயை செய்து இப்போதேனும் திருவமுது கொள்ளுங்கள். அன்றியும், என் ஐயனே, தங்களுக்குச் சிரமம் சிறிதும் வேண்டுவதில்லை. இவ்வுணவுப் பொருள்களை நானே தங்களுக்குச் சிறிது சிறிதாக எடுத்து ஊட்டுகின்றேன். தாங்கள் திருவாய் திறந்து மெதுவாகச் சுவைபார்த்து உண்ணலாம். என் அண்ணலே, இதோ பார்த்தீர்களா? இந்நறு மாங்கனியின் நேர்மையினை! என்ன அழகு; என்ன மணம்; என்ன சுவை! வாயில் இட்டால் மிக இனிக்கும். அன்றியும், என் சுவாமி! இதில் கோது சிறிதேனும் இல்லை; கொட்டையும் மிகச் சிறியது. இது நம் தேமாம் பொழிலில் தானே பழுத்துத் தொங்கியது. அதனை நான் தேவரீர் பொருட்டு அறுத்து வந்தனன். ஆதலின், என் ஐயனே, தாங்கள் இதில் சிறிதேனும் சுவைத்துப் பாருங்கள்" என மொழிந்து அதனை ஆர்வத்துடன் கத்திகொண்டு கூறு படுத்தி அதில் ஒரு பாகத்தை அப்பெருமான் திருவாயில் வைத்தனர்.

வேழமுகனார் அதுபோதும் வாய் திறந்தாரில்லை. அதுகண்ட அண்ணலார் திகைத்தார்; செய்வகை யாதெனச் சிந்தித்தார். பின்னர், நம் பெருந்தகையார் அப் பிள்ளையாரை நோக்கி, "அது போகட்டும்; என் ஆரமுதே, அருட்

பெருந்தகையே, இதையேனும் சிறிது கண்ணெடுத்துப் பாருங்கள். இது நறுநெய் கலந்த திருவமுது. ஆ! இஃது என்ன பரிமளம்! சுவாமி, இதில் தீம்பருப்பும் கலந்துள்ளது; மிக்க சுவையாய் இருக்கும்; சிறிதும் தெவிட்டாது. அண்ணலே, என் அருமை அன்னையார் இதனைத் தங்கள் பொருட்டே பசு நெய் மிகப்பெய்து திறம்படச் சமைத்தனர். என் அன்பே, இதனைத் தயைசெய்து அமுதுசெய்யுங்கள். தங்கள் உடற்களை தீரும்; உள்ளம் குளிரும்; திருமேனி முன்னிலும் பன்மடங்கு பொலிவெய்தும். ஆதலின், எந்தையே, அருட் தந்தையே, அமுது செய்யுங்கள், அமுது செய்யுங்கள்'' என்று பரிவினால் பலப்பல அரற்றி, அத் திருவமுதில் ஒரு சிறிது எடுத்து அப்பெருமான் திருவாயில் வைத்துப் பன்முறையும் இரந்து வேண்டினர்.

கக

அன்பின் அருஞ்செயல்

நம் தெய்வத் திருமகனார் நெடிது முயன்றும் அவரது வேட்கை ஒரு சிறிதும் நிறைவேறிற்றில்லை. எல்லாப் படியாலும் நம் அண்ணலார் இரந்து வேண்டினார்; எனினும், அப் பொல்லாப்பிள்ளையார் உண்ணுதலொழிந்து வாளா கிடந்தனர். அதுகண்ட நம் அருந்தவர் பெரிதும் அதிசயித்தார்; சிந்தனையில் ஆழ்ந்தார்; செயலொழிந்து திகைத்து நின்றார்; முடிவில் அவர் மனந்தளர்ந்து வருந்தலாயினர். செந்தாமரையனைய அவரது திருவதனம் வெண்டாமரை யொத்து வாடலாயிற்று; பவளத் துண்டமென்னப் பொலியும் அதரம் இரண்டும் துன்பத்தால் துடிக்கலாயின; எழில் பெற்றிலகும் விழிகளினின்றும் கண்ணீர் வழிந்தோடி அவரது அகன்ற

மார்பின்மீதும் அழகொளிர் தொந்தியின்மீதும் வெண்முத் துக்களொத்துத் தெறித்து வீழ்ந்தது. நம் அண்ணலார், தேம் பித்தேம்பி அழுத வண்ணம், விநாயகப்பெருமான் திருவடிக ளில் விழுந்து, "என் ஐயனே, ஐயனே, அடியேன் பூஜை புரியுங்கால் தங்களுக்கு என்னென்ன தவறுகள் இயற்றி னேனோ! அறியேன், அறியேன். என் தெய்வமணியே, சிகா மணியே, என் தந்தையார் அளிப்பின் தாங்கள் தடையின் றித் திருவமுது செய்வீர்களன்றோ? அடியனேன் அளிக்க அதனை அமுது செய்யாது தாங்கள் வாளாவிருத்தலின் காரணந்தான் என்னே! அந்தோ இஃது என் தீவினைப் பயனோ; நான் செய்தவக் குறைவோ? யாதோ? அறிகிலேன். தீதில் மணியே, கோதில் கனியே, அடியேன் தங்களைப் பன் முறையும் பணிந்து வேண்டுகின்றேன். இவ்வேளைமீது அருள்கூர்ந்து அமுது செய்யுங்கள், அமுதுசெய்யுங்கள்; ஆ, என் பொல்லாத காலம்! என் ஈசன் முற்றிலும் மறுக்கின் றார்! அந்தோ அடியேன் இத்தனைக்காலம் இரந்து வேண்டியும் என் இறைவன் யாதும் உரைத்திலரே! —கருணை வள்ளலே, கடையேனைக் கண்ணெடுத்துப் பாருங்கள். அந்தோ— அந்தோ என் நாதன் சாலப் பசித்திருந்தும் இவ்வுணவைச் சிறிதும் புசித்திலரே! நான் பாவி! அதனை இதுகாறும் பார்த் திருந்தும்; யாதும் புரிந்திலனே—ஆ! நான் வன்னெஞ்சக் கள்வன்; வாய்மையிலாக் கயவன்; கருணை யில்லாக் கொடி யோன்; அன்பில்லாப் பாவி, சண்டாளன்; துரோகி— அந்தோ, அந்தோ! என் அன்பே, ஆரமுதே, இன்பே, ஈசனே, தங்கள் பசித்துயரறிந்தும் இப்பாதகக் கண்கள் பார்த்திருந்திடுமோ? இப்புல்லிய உடலம் பொறுத்திருந் திடுமோ? இச்சிற்றுயிர் தானும் செல்லா தொழியுமோ?

ஆ! எந்தாய்—ஈசா—இறையே—என் ஏந்தலே, நான்—இதோ—இறக்கின்றேன். இப் புல்லுயிரைப்—போக்குகின்றேன்—ஆ...ஆ....'' என்று வருந்திப் பற்பல அரற்றி வாய் விட்டுக் கதறி அழுது, அருகே இருந்த ஒரு பரிய கற்றூணில் நம் அன்பராய அருந்தவ வள்ளலார் சிறிதும் தாழாது இறையவன் பொன்னடியைப் போற்றித் தொழுது 'படீர்' என்று தம் தலையை ஓங்கி மோதினர்.

உ௰

அருளுருத் தோற்றம்

எல்லா அண்டங்களுக்குந் தனிமுதற் பரம் பொருளாய், எங்கும் நீக்கமற நிறைந்தொளிரும் அகண்ட பரிபூரணராய், அற்புதப் பேரொளியாய், ஆனந்தப் பெருவெளியாய், அணுவுக் கணுவாய், உயிருக் குயிராய், அருட்பெருங் கடலாய், அன்பர்கட் காரமுதாய்த் திகழும் விநாயகப் பெருமான் நம் வள்ளலார் அருஞ்செயல் கண்டும் வாளா விருப்பரோ? அன்பரின் துன்பங் கண்ட ஆனைமுகப் பெருமான் சிறிதும் தரித்திலர்; சிறிதும் தரித்திலர். நம் தெய்வத் திருமகனாரின் சிரம் அக்கற்றூணின் மீது மோதிய அக்கணமே அப்பெருமானின் தடப்பெருங் கையொன்று தாழாது நீண்டு நம் தவச் செல்வர் தலையைத் தாங்கி நின்றது. அஃதுணர்ந்த நம் புண்ணியப் பெருமான் தம்மைத் தடை செய்வார் யாவரெனப் பெரிதும் வெகுண்டனர்; வலிவிற் றூங்கிய அத்திருக்கரத்தைத் தம் சிரத்தினின்றும் நீக்கி, அப் பாறையின் மீது தம் தலையை மீண்டும் மோதுதற்கு முயன்றனர். நெடிது முயன்றும் சிறிதும் இயலாமை கண்டு நம் அண்ணலார் துன்பமிகுதியால் அறிவிழந்து, செயலொழிந்து அத்

தடப்பெருங் கரத்தே சாய்ந்து கிடந்தனர். அதுபோது, "அன்பிற் சிறந்த நம்பியே, பொறுப்பாய்—பொறுப்பாய். நின் அன்பின் அளவு கண்டு யாம் பெரிதும் அகமகிழ்ந்தோம். நீ விரும்பியவாறே இதோ யாம் அனைத்தையும் உண்கின் றோம். வருந்தற்க—வருந்தற்க" என்னும் அருட்பேரொலி நம் அன்பனார் திருச்செவியில் பட்டது. அது கேட்ட நம் புண்ணியனார் பெரிதும் அதிசயித்து ஆர்வ மீதூர விரைவில் திரும்பி நோக்கினர். அதுபோது அப் பொல்லாப் பிள்ளை யார், கண் கவர்ந்தொளிரும் எழில் மிகு பொன்னொளி காட் டித், தம் நீண்ட திருக்கரத்தால் அத்திருவமுதனைத்தை யும் வாரி வாரி விழுங்கக் கண்டனர் நம் பிள்ளைப் பெரு மானுய நாவையூர் நம்பியாண்டார்.

பிள்ளையார் அமுது செயக் கண்ட நம் அருந்தவச் செல் வர் பேருவகைப் பெருங் கடலுள் மூழ்கினர். அதுபோழ்து அவரது கண்களினின்றும் ஆனந்த பாஷ்பம் இடையறாது பெருகியது. அன்பின் மிகுதியால் அங்கம் பூரித்தது; உரோ மம் சிலிர்த்தது; நாத்தழுத்தது. மடைதிறந்தோடும் வெள் ளமே யென்ன அவர்தம் உள்ளத்தினின்றும் இன்பவெள் ளம் பொங்கி யெழுந்தது. ஆதலின் அவர் 'ஹர ஹர' வென்று ஆடினர்; 'ஜய ஜய' வென்று போற்றினர். "ஆ! என் அன்பே, அன்பின் பெருக்கே, இன்பே, இன்ப வெள் ளமே, என் ஆருயிரே, ஆருயிருக் கோருயிரே, என் கண்ணே, கண்ணிற் கருமணியே, கனகமே, கற்பகமே, கற்கண்டே, தேனே, பாலே, கடையேனுக் கருள்புரிந்த முழுமுதலே, முடிவறியாப் பெருமுதலே, அடியேன் தங் களை என்னென்று இயம்பி வாழ்த்துவேன்! எவ்வாறு போற்றித் துதிப்பேன்! ஓ என் பெருமானே, ஈசனே,

இறையவனே, ஆனந்தம்—ஆனந்தம். ஆ! என் ஆனந்தப் பிழம்பே, அருட்கடலே, அமுதசாகரமே, ஆனந்தம்—ஆனந்தம். அன்புருவே, அருளுருவே, இன்ப எழிலுருவே, அற்புதத் திருவுருவே, ஆனந்தம்—ஆனந்தம்'' என்று நம் புண்ணியப் பெருந்தகையார் பித்தர் போன்று பலப்பல அரற்றி அன்பினால் மூர்ச்சித்து அடியற்ற பனை போல நிலமிசை நெடிது விழுந்தார்.

உக

அன்பனார் இல்லம் திரும்புதல்

சிறு பொழுது சென்றது. பிள்ளையார் அமுது செய்ததைக் குறித்து நம்பியாண்டார் உள்ளம் உவந்து அவரைக் கட்டியணைத்தார்; கன்னங் கிள்ளிக் களிகூர்ந்தார்; ஆர்வ மிகுதியால் அன்புரை பலவும் புகன்றார். இங்ஙனம் இன்புற்றிருக்கையில் நம் அண்ணலாருக்குப் பாடசாலையின் நினைவு திடுமெனத் தோன்றிற்று. அக்கணமே அவர் உளம் பதைத்து, "எந்தையே, அடியேன் கல்விக் கழகம் ஏகுதல் வேண்டும். அந்தோ! நான் தங்களை எவ்வாறு விட்டுப் பிரிந்திருப்பேன். எனினும், என் ஐயனே, தயை கூர்ந்து மன்னியுங்கள். நான் ஓர் நொடிப்பொழுதில் வந்துவிடுவேன்; சிறிதும் தாழேன்'' என்று கூறியவண்ணம் தம் இல்லம் நோக்கி விரைவின் ஓடினார்.

நம் அண்ணலார் இல்லம் திரும்பினாரே அன்றி அவர் உள்ளம் ஒரு சிறிதும் திரும்பிற்றில்லை. அஃது அப்பெருமானின் பொற் பாதங்களையே புகலெனக்கொண்டு ஆலயம் விட்டு அகலா திருந்தது. நம் குலமகனார் கோயிலைக் கடந்தும், அவர்தம் அமுதவாய் அப்பெருமானின் திரு

78179

நாமங்களேயே அன்பு மழை என்ன எங்கும் பொழியலா யிற்று. நம் அன்பர் செல்லுமிட மெல்லாம் அவர்க்கு ஆலய மாய்த் திகழ்ந்தது. மரமும் செடியும் வீடும் வாசலும் நம் மாதவனுர்க்கு வேழ முகத்தோன் திருவுருவென்னத் திகழ்ந்தன. நம் செல்வர் காணும் பொருளெல்லாம் கண பதியாய்க் கண்டு களித்துப் பாடிப் பணிந்து இல்லம் நாடிச் செல்லுவா ராயினர்.

சிறுபோது செல்லுமுன் நம் பெருந்தகையார் தம் இல் லம் புகுந்தனர். அதி போது அவர்தம் அன்னையார் இல்ல றத் தொழிலில் கருத்துக் கொண்டிருந்தனர். நம்பெருந்தவச் செல்வர் ஆங்குள்ளார் எவரோடும் பேசினரில்லே. அவர்தம் கண்ணும் கருத்தும் அக்கணபதியின் வடிவழகு வெள்ளத்தில் கட்டுப்பட்டிருந்தன. நம் பிள்ளேப்பெருமான் தாம் முன்னரே ஒழுங்குபெற அமைத்துப் பட்டுக் கயிற்றல் பிணித்து வைத் திருந்த ஓலேச் சுவடித் தூக்கினே விரைவின் எடுத்துத் தம் அழகிய தோளில் தாங்கிய வண்ணம் தலேவாயில்தன்னே அடைந்தனர். தம்முடன் பழக்கமாகத் துணே கொண்டே கும் பள்ளிச்சிறுவர் ஒருவரும் ஆங்கு இல்லாமை கண்டு நம் அண்ணலார் அதிசயித்து நாற் புறமும் நோக்கினர்; நெடிது நோக்கியும் நண்பரொருவரும் வாராமை யுணர்ந்த வள்ளலார் உளம் திகைத்து வானம் நோக்கினர். கதிரவன் வானில் உயர எழும்பி ஒளிர்தலேக் கண்ட நம் மாதவனர் மனம்பதை த்து, "அந்தோ! ஈசா, நான் யாது புரிவேன். நாழிகை நெடிது கடந்தனவே! என் ஈசன் எழில் நலத்தில் ஈடுபட்டு நான் ஆரியன் ஆணேக்கு மீறி நடந்தேனே! அந்தோ— அந்தோ! நான் பாவி! இன்று அரிய பாடங்கள் அனைத்தினே யும் இழந்தேனே! குரவனர் கோபிக்கின் யாது செய்

வேன்! அதனை நான் எவ்வாறு ஆற்றுவேன்" என்று பலப்பல இயம்பி, உளம் கலங்க, வதனம் வாடக் காலோய்ந்த நடையினராய்ச் செய்வகை தெரியாது, செல்லுநெறி யறியாது, பையப் பையப் பாடசாலை வீதி வழியே செல்லுவாராயினர்.

உ௨

அண்ணலார் கல்வி பயிலல்

கருத்தின்றிக் கால் சென்ற நெறியே கண் கொண்டு செல்லும் நம் செல்வனார் சில அடிகள் மெல்ல நடந்தனர். முடிவில் அவர் ஓர் இடத்தே நிலைத்து நின்று யாதோ ஆழ்ந்து சிந்திக்கலாயினர். சிறுபோதில் அவரது கூர்ந்த கண்கள் குளிர்ந்து தோன்றின; வாடிய வதனம் ஒளிர்ந்து விளங்கியது. அகத்தில் ஆனந்தம் தோன்ற, முகத்தில் முறுவல் பூத்தது. துன்பத்தால் மெலிந்து தளர்ந்த அவர்தம் எழிலுடலம் இன்பத்தால் ஊக்கமும் உரனுங் கொண்டு ஒளிர்ந்தது.

கன்றினை நினைந்து கடுகிச் செல்லும் புனிற்றா வென்ன நம் அண்ணலார் ஆலயம் நோக்கி அவாவினால் ஓடினார். பூம்பொழிலிடையே களிப்பிற் பறந்து செல்லும் புள்ளினமொத்து நம் புண்ணியனார் புவியிற் கால் பாவாது காற்றினுங் கடிது சென்றார். நம் பிள்ளையார், பெருமானைக் கண்டதும், "என் ஐயனே, அழகனே, அடியேன் இதோ வந்து விட்டேன். காலம் தாழ்த்ததால் கணக்காயர் என்னைக் கோபிப்பார். ஆதலின், அடியேன் கல்விக்கழகம் குறுகினேனில்லை. என் அரசே, அன்பே, அது குறித்து என் பிழையினைப் பொறுத்தருளும். அன்றியும், அண்ணலே, இன்று ஆரியன்

அருளும் அரிய பாடங்கள் அனைத்தினையும் அடியேன் இழந்தொழிந்தேன். ஆதலின், இறையே, ஈசனே, இன்று தாங்களே எனக்குத் தேசிகன். தாங்கள் தயை கூர்ந்து அவைகளை அடியேற்குப் புகட்டிடுதல் வேண்டும்'' என்று கூறி நிலமிசை விழுந்து தொழுது போற்றினர். பின்னர், நம் அண்ணலார் ஓலைச் சுவடியை விரைவின் அவிழ்த்துப் பரிவுடன் அப்பெருமான் அருகே சென்று கைகட்டி வாய் பொத்தி அவர்தம் திருமுகம் நோக்கிப் பணிவின் நின்றனர்.

நம் பெருந்தகையார் அவ்விதம் பணிந்து நின்ற சிறு போதில், சிலையுருவாய் விளங்கும் அப்பொல்லாப் பிள்ளையார் பேரெழில் வாய்ந்த கருணைத் திருவுருவாய்த் திகழ்ந்தனர். அன்பிற் பெரியராய நம் அருந்தவச் சிறுவர் அப்பெருமானின் மின்னொத்திலகும் மணி முடியின் மாண்பினையும், அருள் பொழியும் எழில் விழியின் இயல்பினையும், பிறழ்ந்தொளிரும் பிறைக் கோட்டின் பொலிவினையும், அழகு திகழ் ஐங்கரத்தின் அமைப்பினையும், ஆரம் தாழ் அகன் மார்பின் பரப்பினையும், சுந்தரத்தொந்தியின் சிறப்பினையும், செம்பவள மேனியின் வனப்பினையும், அருள் மணம் வீசி ஆனந்தத் தேன் பொழியும் அற்புதப் பொற்றாமரை யடியின் பெருநலப் பொற்பினையும் தம் புண்ணியக் கண்களால் கண்டு வணங்கி, எல்லையில்லா இன்ப வெள்ளத்தில் திளைத்து நின்றனர். அது போழ்து, அவ்வானைமுகவள்ளல் தம் தடப்பெருங்கையினை நம் நாரையூர்ப் பெருமான் சிரத்தே வைத்துத் தம் கருணை விழிகளால் குளிர்ந்து நோக்கினர். நோக்கலும், நற்றவம் வாய்ந்த நம்நம்பியாண்டார் அன்றைய பாடம் அனைத்தும் ஐயந்திரிபு அற அக்கணமே உணர்ந்து உள்ளம் உவப்புற்றனர்.

நம் அண்ணலார் திருவதனம் அதுபோது தேசோ மயமாய்த் திகழ்ந்தது. அவர் ஆனந்த பரவசராய்ப் பக்திக் கடலில் ஆழ்ந்திருந்தனர்; தேகம் புளகாங்கிதங் கொள்ளக் கண்மாரி சொரிந்து நின்றனர்; உள்ளம் உருகும் வண்ணம் கவிமாரி பொழிந்து போற்றினர்.

அப்பொல்லாப் பிள்ளையார் தம்மை அருள் கூர்ந்து ஆண்டு அடிமை கொண்டமையை நம் நம்பியாண்டார், தாம் அப்பெருமான் மீது ஆர்வ மிகுதியால் பாடியருளிய திரு விரட்டைமணி மாலையில் நன்கெடுத்துக் காட்டுகின்றார். அப்பாடல்களுள் சில வருமாறு :—

வெண்பா

என்னை நினைந்தடிமை கோண்டேன் இடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான்—புன்னை
விரசுமகிழ் சோலை வியன்நாரையூர் முக்கண்
அரசுமகிழ் அத்திமுகத் தான்.

யானைத் தியவெண்பா என்னை நினைந்தடிமை
தானே சனார்த்தனற்கு நல்கினான்—தேனே
தொடுத்தபொழில் நாரையூர்ச் சூலம் வலனேந்தி
எடுத்த மதமுகத்த ஏறு.

கட்டளைக் கலித்துறை

நாந்தன மாமனம் ஏத்துகண்டாய் என்று நாண்மலரால்
தாந்தன மாக இருந்தனள் நாரைப் பதிதன்னுளே
சேர்ந்தனனே ஐந்து செங்கையனே நின் திரள்மருப்பை
ஏந்தினனே என்னை ஆண்டவனே எனக் கென்னையனே.

௨௫

அன்னையார் அலமரல்

நடுப்பகல் நண்ணியது ; நம் அண்ணலார் அதுபோதும் ஆலயம் விட்டு அகன்றாரில்லை. அவர் அன்பின் பெருக்கால் அனைத்தும் மறந்தனர் ; ஆனந்த வாரியில் ஆடித் திளைத்தனர் ; கணபதியின் கருணைவிலாசத்தில் கட்டுப்பட்டுக் கனிந்துருகி நின்றனர்.

இங்ஙனம் சிறுபோது சென்றது ; நம் வள்ளலார் வேழமுகத்தோன் அருளாணையால் இல்லம் திரும்ப இசைந்தனர். அன்பின் மிக்க அவர்தம் அருமை அன்னையார் தம் தவமைந்தன் வருகை காணாது வருந்தி வழிபார்த்திருந்தனர். நம் அண்ணலார் வருகை கண்டதும் அவ் வன்னையார் அகமகிழ்ந்தனர். நம்பியும் தம் நளின வதனத்தில் நகை தோன்ற இல்லம் புகுந்தனர்.

" என் கண்ணே, என்னே இத்துணை நேரம்? கல்விச் சாலையில் காலம் தாழ்த்ததோ?"

"என் அம்மையே, நான் இன்று கல்விக்கழகம் சென்றேனில்லை. பெருமான் பூசையில் நாழிகை நீண்டது. ஆதலின், அன்னாய், நம் பொல்லாப்பிள்ளையார் எனக்கு எல்லாப் பாடங்களையும் இனிது உணர்த்தினார்."

" பிள்ளையார் போதித்தனரா? இஃதென்ன விந்தை!— அது போகட்டும், என் அன்பே, நீ ஆலயப் பூசையை அழகுறப் புரிந்தனையா?"

" அன்னையே, அஃது எவ்வாறு இயலும்? ஏதோ ஒருவாறு இயற்றினேன். ஆனால், அம்மையே, நம் அண்ணலார் அதற்குள் கோபித்துக்கொண்டார்."

"எந்த அண்ணலார்?"

"நம் பொல்லாப் பிள்ளையார், அம்மா!"

"என்ன? அவரா உன்மீது கோபித்துக்கொண்டார்! இஃது என்ன அதிசயம்! ஆனால், என் செல்வமே, அதனை நீ எவ்வாறு அறிந்தனை?"

"அம்மா, அதனை நான் நன்றாக உணர்ந்தேன். அதில் சிறிதும் சந்தேகம் வேண்டாம். ஏனென்றால், அவர் நெடு நேரம் வரையில் நான் படைத்த நிவேதனப் பொருள்களை உண்ணவே யில்லை."

"ஓ அதனால் தான் நீ அவ்வாறு எண்ணுகின்றனையா? அது முற்றிலும் தவறு. என் கண்ணே, எங்கே அந்த நிவேதனப் பொருள்கள்?"

"என்ன அம்மா? நிவேதனப் பொருள்களா! ஓ அவர் உண்ணாததால் நான் அவைகளை அப்படியே கொணர்ந்துவிட்டேன் என்று தாங்கள் எண்ணுகின்றீர்களா? என் அன்னையே, நம் பெருமான் பசித்திருக்க நான் பார்த்திருப்பேனா? ஆதலால், நான் மிகுதியும் வருந்தினேன்; பன்முறையும் அவரை வேண்டினேன். அதுபோதும் அவர் அவைகளை உண்ணவே யில்லை. முடிவில் நான் என் தலையை அங்குள்ள ஒரு கம்பத்தில் மோத முயன்றேன். உடனே நம் பெருமான், 'நம்பி, பொறு—பொறு' என்று சொல்லி எல்லாவற்றையும் அப்போதே சாப்பிட்டு விட்டார்."

இதனைக் கேட்டதும் அவ்வம்மையார் மிகுதியும் வியப்புற்றார்; யாதும் தோன்றப் பெறுமலே சிறிதுநேரம் திகைத்து நின்றார்; பின்னர்ப் பெருமூச் செறிந்தார். அன்னையின் நிலைமை கண்ட அண்ணலாரும் அதிசயித்து நின்றார்.

"பிள்ளையார் இவனிடம் பேசினாராம்; பின்னர் எடுத்தெடுத்து அனைத்தையும் விழுங்கினாராம்! இதனை யார் நம்புவார்?—நம்பி, நீ இவ்வாறு பொய்யுரைக்க எங்குக் கற்றனை? என் கண்ணே, கணபதி கோபிப்பார்! ஒன்றும் ஒளிக்கவேண்டாம்; உண்மையைச் சொல்."

"அம்மா, என்னைப் பொய்யனென்று எண்ணுகின்றீர்கள்? உண்மையில் அவைகளை ஈசன்தான் அருந்தினர்! இதில் ஆச்சரியம் என்ன? தந்தையார் தந்தால் நம் தேவன் உண்பதில்லையா!"

அதுபோது அவ்வம்மையார் யாதும் பதில் உரைக்கவில்லை. பின்னர், "நல்லது, கண்மணீ, நாழிகை யாகின்றது. உண்ணுதற்கு உள்ளே வருவாய்; பிறகு யாவும் பொறுமையாய்ப் பேசலாம்" என்று கூறி அண்ணலாரை அழைத்துச் சென்றார்.

அன்னையின் ஐயுறவு நம் அண்ணலாருக்கு வியப்பினையே விளைவித்தது. அவர்தம் அன்னையார் தம் மைந்தன் மொழிந்த அற்புதச் செய்தியைப் பன்முறை ஆழ்ந்து நினைந்தனர். அவ்வம்மையார் நெடிது நினைந்தும் உண்மை உணர்ந்திலர். ஆதலின், அவர் இப்புதுமையைத் தம் கணவர்க்குரைத்தலே கடனெனக்கொண்டனர்.

திருவமுதுண்டதும் நம் ஏந்தலார் இல்லம் தங்கி இளைப்பாற எண்ணிலர்; கல்விக்கழகமுங் கருதினரில்லை. நம் புண்ணியர் பெருமான் கோயிலே பொருளாக் கண்டனர்; ஆதலின் அவர் ஆலய மடைய அவாக் கொண்டேகினர்.

பிற்பகல் சென்றது; பொழுதும் சாய்ந்தது. நம் பிள்ளைப் பெருமான் அப்பிள்ளையார் தம்மைச் சிறிதும் பிரிந்தாரில்லை; இல்லமேகுவான் எண்ணமும் நண்ணினரில்லை. அவ்வேழ

முகத்தோனை வலம்வந்து தொழுவதும், வாயாரப் புகழ்வதும், நெஞ்சுருகி நினைதலும், நிலம் விழுந்து பணிதலும், 'ஹரஹர' என்றலும், ஆடலும், பாட்டும், நம் ஏந்தலாருக்கு இன்றி யமையாத் தொழில்களாய் இருந்தன.

உச

தந்தையின் தயக்கம்

கதிரவன் கடலில் புகுந்தனன்; கமலங்கள் கைகூப்பித் தொழுதன; குமுதம் கவின் முதங் காட்டின; மனைதொறும் மாதரார் திருவிளக் கேற்றித் தெய்வம் பராவினர். அயலூர் சென்றிருந்த, நம் அண்ணலாரின் அருமைத் தந்தையார் அதுபோது ஆர்வமோ டில்லம் நண்ணினர்.

bICS தம் நாயகனுர் நல்வரவு கண்ட நம்பியின் அன்னையார் அக மகிழ்ந்து அவர்க்குச் செயன்முறை பலவும் செவ்விதின் ஆற்றினர். அது கொண்டு களியுற்ற அவ்வந்தணர் தம் காதன் மைந்தரைக் காணுவான்வேண்டி மனைவியை நோக்கி வினவுவா ராயினுர். அதுபோதே நம் அருந்தவச் செல்வரும் அகத்திற் புக்கனர். தம் தந்தையைக் காணலும் தனயனுர் தாழ்ந்து வணங்கினர்; உள்ளம் உவந்து ஒரு புறம் ஒதுங்கி நின்றனர்.

"என் கண்ணே, நீ கடவுளர் பூசை தவறுதலின்றி முறைமையிற் புரிந்தனையா?"

"தந்தையே, தங்கள் கட்டளைப்படியே யாவும் புரிந்தனன். தவறுதல் யாதும் சிறியேன் கண்டிலன்."

"நல்லது; குழந்தாய், நீ கலங்கி நிற்கக் காரணம் என்ன?"

"எந்தையே, அன்னையார் என்னைப் பொய்யன் என்று ஐயுறுகின்றனர்."

"ஏன்? என் கண்மணீ, நீ யாது பொய் புகன்றனை?"

"இல்லை எந்தையே, நான் உண்மையே உரைத்தேன். அது போகட்டும், அப்பா, தாங்கள் திருவமுதளித்தால் கடவுள் உண்பதில்லையா?"

நம் அண்ணலார் வினவிற்கு விடையறியாது அத்தந்தையார் முதலில் சிறிது தயக்கமுற்றனர். பின்னர் அவர், "காரணம் யாது? குழந்தாய், கடிதிற் கூறுக" என்று விரைவின் வினவினர்.

"அப்பா, விநாயகர் நிவேதனப் பொருளை உண்டனர் என்றேன்; அதுகேட்டு அன்னையார் ஐயுறுகின்றனர்—அது தான் காரணம்."

"இஃதென்ன விபரீதம்—என்ன? விநாயகர் உண்டனரா!"

"என்ன அப்பா! தாங்களும் இவ்வாறு உரைக்கின்றீர்களே—தந்தையே, தாங்கள் தந்தால் இறைவன் உண்பதில்லையோ!—அது போகட்டும், அப்பா, முன்பொரு நாள் - தாங்கள் நம் கணபதிக்குக் கதவு மூடி அமுது படைத்தீர்களே-அன்று நான் தங்களைக் கேட்டதற்கு, 'இறைவன் உண்பார்; ஆதலால் எச்சில் செய்யேல்' என்று தாங்கள் இயம்பவில்லையா?—என்ன அப்பா, தாங்களும் நம் கணபதியைப்போல யாது கேட்பினும் பேசாதிருக்கின்றீர்களே!"

நம் அண்ணலார் உரைப்பன யாவும் அத்தந்தையாருக்கு மேலும் மேலும் ஆச்சரியத்தையே விளைத்தன. ஆதலின், அவர் யாதும் தோன்றப்பெறுமல் சிறுபோது திகைத்து நின்றுர். பின்னர், அவர் தம் மனைவியின் முகத்தை நோக்

கினர். அவ்வம்மையாரும் அவ்வதிசயச் செயலே நினைந்து நின்றனர். தம் பெற்றோர் இருவரும் பேசாதிருத்தல் கண்ட நம் நம்பியாண்டார் கமலக்கண்கள் கண்ணீர் சொரியத் தலை குனிந்து தேம்பி அழுதனர். அது கண்ட அன்னையார் மனம் பதைத்துக் கண்ணீர் துடைத்துத் தம் மைந்தரை அன்புறத் தழுவி இன்புறச் செய்தனர்.

உ௫

சந்தேகம்—விபரீதம்

இங்ஙனம் சிறுபோது சென்றது. அவ்வருந்தவத் தந்தையார் பலப்பல நெடிது நினைந்தனர். பின்னர், அவர் தம் மைந்தரை நோக்கி, "குழந்தாய், நீ வருந்துதல் வேண்டாம். யான் அயலூர் சென்று அலுத்து வந்தனன். அன்றியும் எற்கு உடல் நலமில்லை. ஆதலின், நம்பி, நாளையும் நீயே பூசனை புரிவாய்" என்று மிக மெலிவின் மொழிந்தனர்.

அதனைச் செவி மடுத்த அண்ணலார் முகமலர்ந்தனர்; அவர்தம் உள்ளக்கமலம் தேனூறித் திகழ்ந்தது; உவகை மிகுதியால் உரோமம் சிலிர்த்தது. "ஆ அப்பா, அப்படியா! ஆயின், ஆனந்தம் ஆனந்தம்!— என் அன்னையே, நாளை நம் பெருமானுக்குத் தீம்பருப்போடு நறு நெய் கமழ நிவேதனம் வேண்டும். நான் பொழுதொடு பூம்பொழில்சென்று, வண்ண மலர்கள் வளம்பெறப் பறித்து, நாளை நம் கணபதியாருக்குக் கண்ணியும் மாலையும் நானே கவின் பெறக் கட்டுவேன்" என்று விரைந்து கூறி நம் வள்ளலார் உள்ளங் களித்தனர்.

நம்பியின் ஆனந்தங் கண்ட அவர்தம் அன்னையும் தந்தையும் பெரிதும் திகைத்தனர். பின்னர், அவ்வம்மையார், "என் கண்ணே, நீ விரும்பிய வண்ணமே யாவும் செய்யலாம்;

வா" என விளித்து நம் அண்ணலாருக்கு அமுதூட்ட விழைந்தனர்.

இரண்டொரு நாழிகை கழிந்தன; அண்ணலார் அமளியின்மீது அமர்ந்தனர். அதுபோதும் அவர் அப்பெருமான் புகழே பெரிதுவந்தேத்தினர்; பூசனை குறித்தே பேசி மகிழ்ந்தனர். அவர்தம் பெற்றோரும் அன்றிரவு சிறிதும் துயின்றாரில்லை. தம் மைந்தனார் மொழிந்த புதுமை நினைந்து அவர்கள் பேதுற லாயினர்.

உசு

அற்புதமோ—திருவருளோ!

வைகறை வருமுன்னர் நம் வள்ளலார் மலர் பறிக்க விழைந்தேகினார். தம் மைந்தர் மொழியினில் ஐயுற்ற அவர்தம் தந்தை உண்மையறிய அதுபோதே ஆலயம் சென்று ஆங்கோர்பால் ஒளிந்திருந்தனர். பூம் பொழில் சென்ற நம் மாதவர் விரைவின் நறுமலர் கொணர்ந்து நலம்பெற மாலை புனைந்தனர். நம்பி நினைந்தவாறே அவர்தம் அன்னையார் புத்துருக்கு நெய்யும் இனித்த நறும் பருப்பும் மிகக் கலந்து சித்திரான்னம் சுவைபெறச் சமைத்துத் தந்தனர்.

பூசைக்கு வேண்டுவன யாவும் இனிதின் அமைந்தபின் நம் அண்ணலார் ஆலயம் நோக்கிச் சென்றனர். கணபதியைக் கண்டதும் நம்பியாண்டார் காதல் மிகுந்தனர்; கட்டியணைத்தனர்; அவ்விறைவன் இன்புறு மொழிகள் பலவும் இயம்பி நின்றனர்.

அபிடேகாலங்காரம் அனைத்தும் இனிது முடிந்ததும், நம் நாரையூர்ப் பெருந்தகையார் நிவேதனத் தட்டைக் கரத்தில் தாங்கி, அப்பெருமான் அருகே சென்று, "வேழமுக வள்

ளலே, ஐங்கரச் செம்மலே, அடியேன் பெருந்தவமே, தயை மிக்க என் தந்தையின் ஆணையால் அடியேன் இன்றும் தங்களைப் பூசிக்கும் பெரும் பேறு பெற்றேன். ஆதலின், என் அன்பே, அழகொளிரும் ஐயனே, அற்புதப் பெருமானே, இத்திருவமுதைத் தாங்கள் தயை கூர்ந்து சுவை பார்த்தல் வேண்டும்" என்று மிகப்பரிவுடன் பகர்ந்து அப்பெருமானைப் பெரிதும் வேண்டுவாராயினர். அதுபோதே அப்பொல்லாப் பிள்ளையார், பேரொளி திகழும் அருளுருக் காட்டி அத்திருவமுதனைத்தினையும் தம் தடப்பெருங் கரத்தால் எடுத்தெடுத்து அருந்துவாராயினர்.

நம் அண்ணலாரின் அருஞ் செயல் யாவும் மறைவிடத்திருந்து மகிழ்விற் கண்ணுறும் அவ்வருந்தவத் தாதையார் காணுதற்கரிய கணபதியின் கருணைத் திருவுருவைத் தம் கண்களாரக் கண்டதும் "ஆ! இஃதென்ன? அற்புதமோ! ஐயன் திருவருளோ!" என்னத் திகைத்து நின்றனர்.

பின்னர், அவ்வந்தணச் செல்வர், ஆனந்தம் பொங்கியெழ ஓடிச் சென்று, தம் காதன் மைந்தரைக் கட்டித் தழுவினர்; உச்சி மோந்தனர்; உள்ளம் உருகினர்; உவகை பூத்தனர். அதுபோது நம் அண்ணலார் அதிசயித்து நின்றனர்.

௨௭

உண்மை வெளிப்படல்

அளப்பரும் புண்ணியத்தால் நம் வள்ளலாரைப் பெற்றெடுத்த அப்பெருந்தவத் தாதையின் ஆனந்தக் களிப்பினை யாவரே உரைக்கற்பாலர்! அவ் வாதிசைவ அந்தணர் தம் அருந்தவப் பயனை எண்ணி யெண்ணி இறும்பூ துற்றனர்; கழி பேருவகையால் கண்ணீர் சொரிந்தனர்; ஆனைமுகத் தோன்

அருட்டிறம் வியந்தனர்; அன்பின் பெருக்கால் "ஹர—ஹர" என்றனர்; ஆடினர், பாடினர்; வாழ்த்தினர், வணங்கினர்.

பின்னர், அப்பெரியார் தம் தவமலி திருமைந்தரைத் தோளில் தாங்கித் தெருதொறும் சுற்றிச் சுற்றி வந்தனர்; "யானே தவஞ்செய்தேன்-யாதும் இனி அஞ்சேன்" என்று அன்பின் அரற்றி இன்புற்றுடினர். இவ்வதிசயச் செயலின் வரலாறறிய மக்கள் யாவரும் ஒருங்கு திரண்டு அவ்வந்தணச் சைவரைப் பின் தொடர்ந்தோடினர்.

நம்பியின் நற்றவப் பேற்றினை அவ்வருந்தவத் தந்தை ஆங்குள்ளார் அனைவர்க்கும் ஆர்வமோடு அரற்றி மகிழ்ந்தனர். அவ்வற்புதச் செயலின் அருமையறிந்த மக்கள் அனைவரும் நம் அண்ணலாரின் பொற்பதம் பணிந்து புகழ்ந்து போற்றினர்.

நம்பியின் அருமை அன்னையின் இன்பச் செயல்களை இயம்பவும் வேண்டுமோ! அவ்வம்மையார் தம் செல்வமைந் தரை ஓடியெடுத்து, உச்சிமோந்து, மார்புறத் தழுவிச் சீராட் டிப் பாராட்டிச் சிறப்புறு செயல்கள் யாவும் செய்து மகிழ்ந் தனர்; அவரை அரிய ஆசனத்திருத்தித் தீபம் பலவும் திகழ வைத்தனர்; பூரணகும்பம் பொற்புற நிறுத்தினர்; அரிசி தூவி ஆலம் சுழற்றினர்; கரும்பொட் டிட்டுக் கண்ணேறு கழித்தனர்; அளவிலா ஆனந்த வாரியில் மூழ்கித் திளைத்து அசைவற்று நின்றனர்.

அன்றுமுதல் அப்பொல்லாப் பிள்ளையாருக்கு நம் நாரை யூர் நம்பியாய புண்ணியப் பெருந்தகையே நியமமோடு நிவே தனம் பலவும் படைத்து வழுவின்றிப் பூசனை புரிந்து வந்த னர். பூசனை முடிந்ததும், நமது நம்பியாண்டார் நம்பிக்கு அவ்வானைமுகப் பெருமானே ஆசிரியராய் அமர்ந்து, அருங் கலைகள் யாவும் விளக்கமற அநுதினமும் அருளுவா ராயினர்.

நம் அண்ணலாரின் அற்புதச் செய்தி பல்லூர்கட்கும் பரவலாயிற்று. அஃதுணர்ந்த மக்கள் அனைவரும் பெரிதும் வியப்பெய்தி நம் அன்பரைக் காணும்பொருட்டுத் திரள்திரளாக வந்து குவிந்தனர். அவர்கள் தம்மால் இயன்ற நிவேதனப் பொருள்களை அன்பின் மிகுதியால் அளப்பிலவாயக் கொணர்ந்து நம் அருந்தவச் செல்வரிடம் நல்கினர். அப்பெருந்தகையினரும் அவையிற்றை ஆர்வமுறப் பெற்றுப் பொல்லாப் பிள்ளையாருக்கு ஊட்டி உவகை மிகுந்தனர்.

உஅ

இராசராசதேவர்

இங்ஙனம் நிகழும் நாளில் தஞ்சையம் பதியைத் தமக்குத் தலைநகராகக் கொண்டு சோழமண்டலத்தைச் செவ்வின் ஆண்டு வந்தனர் ஓர் அருந்தவப் பெரியார். அவர்தம் திருநாமம் இராசராச அபயகுலசேகர மன்னர் என்பது. அவர் சைவநெறி வழுவாத செம்மனச் செல்வர்; சிவபெருமான் புகழ்பரவும் புண்ணியத் தொண்டர்; அடியவரை அரனெனவே தொழுதேத்துந் தூய்மையாளர்.

இம்மணிமுடி மன்னவர் தம் அணிமணிமாடத் தமர்ந்து அருமையின் அரசியல் புரிந்தொழுகும் நாட்களில், ஒருநாள் சைவநலம் திகழும் சிவநேசர் ஒருவர் அவண் அணுகி மொழிக்குமொழி தித்திக்கும் தேவாரத் தொகுதியுள் இரண்டொன்றைத் தேனொழுகச் சொற்றனர். அதனைச் செவிமடுத்த அச்சோழர் பெருமான் உள்ளம் உருகி உடல் வியர்த்தனர்; காதல் ததும்பிக் கண்ணீர் வார்த்தனர்.

"சிவவேடப் பொலிவுடையீர், என் கன்னெஞ்சங் கரைக்கவல்ல இவ்வற்புதப் பாடல்கள் எங்குள? இவையிற்றை இயற்

திப்போந்த அருளாளர் யாவர்? அவர்தம் பெருமைதான் என்னே? யாவும் அடியேற்கு அடைவுபட உணர்த்தல் வேண்டும்.''

''அரசரேறே, இவையும் இவைபோன்ற பலவும் தேவாரம் என்னும் செந்தமிழ் வேதத்துள் செறிந்துள. ஞானசம்பந்தரும், நாவுக்கரையரும், நம்பியாரூரரும் நம்மனோர் உய்ய வேண்டி அதனைக் கருணை கூர்ந்து மொழிந்தருளினர்.''

''ஆ! அங்ஙனமாயின் அடியேன் உய்ந்தேன்—உய்ந்தேன். அத்தீந்தமிழ் வேதம் இதுபோது எங்குளது? அன்புடையீர், தெய்வமணம் வீசும் அத்தேவாரத் தமிழ்வேதத்தை அடியேன் கண்குளிரக் காணுதல் வேண்டும்; வாய்மணக்கப் பாடுதல் வேண்டும்; செவியினிக்கப் பன்முறை கேட்டுக் களிகூரல் வேண்டும். ஆதலின், அருந்தவப் பெரியீர், அடியேன் உள்ளம் உவக்குமாறு அவ்வற்புதப் பாடலுள் மேலும் இரண்டொன்று தயைகூர்ந்து அருள்செய்யுங்கள்.''

''மன்னர் பெருமானே, தங்கள் மனப்பாங்கு கண்டு பெரிதும் மகிழ்கின்றேன். எனினும், ஏந்தலே, அடியேன் செய்தவக் குறையால் அவ்வருட்பாடலுள் இரண்டொன்றே அருளப்பெற்றேன். ஆதலின் அரசே, அத்தமிழ்வேதத் தொகுப்பினை—ஞானக்களஞ்சியத்தைப்—பெறுவான் வேண்டியே அடியேன் அவனிமுழுதும் அலைந்து திரிகின்றேன்.''

இதனைச் செவியுற்றதும் அச்சோழர் பெருமான் உள்ளம் சோர்ந்தனர்; பெருமூச் செறிந்தனர்; ''அந்தோ! கெட்டேன்—கெட்டேன்'' என்று வாய்விட்டரற்றினர். பின்னர், அம்மன்னர்பிரான் ஒருவாறு உளந்தேறி, ஏவலாளரை விரைவின் விளித்துத் தேவாரத் திருமுறையைத் தேடுமாறு பல்லிடத்தும் ஏவினர்.

உகூ

மன்னவர் புறப்பாடு

வளவர்கோன் இட்ட ஆணையின் வண்ணம், அவ்வேவலாளர் நாடெங்கும் சென்று நயந்து தேடினர்; மூலையும் முடுக்கும் விடாது துருவித் துருவிப் பார்த்தனர்; பல்லிடத்தும் போந்து பறையறைந்து அரசர் பெருமான் ஆணை இயம்பினர். இங்ஙனம் பன்னெடுங்காலம் முயன்று தேடியும் அவ்வேவலாளர் தேவாரத் தொகுதியைக் கண்டாரில்லை. அதனால், மன்னவர்க்கு மனக்கவற்சி பெரிதாயிற்று. அவர் ஊணினை வெறுத்தனர்; உறக்கம் தவிர்த்தனர்; பெருமூச்செறிந்தனர்; பேதுற்றயர்தனர்; "தேவாரம்—தேவாரம்" என்றே அல்லும் பகலும் அரற்றலாயினர்.

இவ்வாறு சிலபகல் சென்றன. ஒரு நாள், அவ்வேவலாளருள் ஒருசிலர் மன்னர்மன்னவர் திருமுன் சென்று, நாரையூர் நம்பியாண்டார் நாடோறும் நிகழ்த்திவரும் அற்புதச் செயலைப் பரிவின்மொழிந்து பணிந்து நின்றனர். அதுகேட்ட அபயகுல சேகரர் அகமகிழ்ந்து முகமலர்ந்தனர். பின்னர், அவ்வரசர் பெருமான் ஏவலாளரை நோக்கி, "அங்ஙனமாயின் நாம் இதுபோதே நாரையூர் சென்று அப்புண்ணியப் பெருந்தகையின் பொற்பாதம் பணிவோம்; பொல்லாப்பிள்ளையாரின் திருவருள் பெறுவோம்; தேவாரத் தொகுப்பின் இருப்பிடம் அறிவோம்.—புறப்படுங்கள்—புறப்படுங்கள்" என்று ஆர்வமிகுதியால் ஆரவாரஞ்செய்தனர்.

மன்னர் மொழிந்த மறுகணமே தஞ்சைமா நகரம் இந்திரலோக மொத்து எழிலுற்றிலங்கியது. மேளதாள முழக்கங்கள் மிக்கெழுந்து தோன்றின. யானைகள் மீதும், ஒட்ட

கங்கள் மீதும் நிவேதனப் பொருள்கள் அளப்பிலவாய் மலை போல் மிளிர்ந்தன. நால்வகைச் சேனையும் புடைசூழ நம் இராசராச தேவர் நாரையூரை நோக்கிச் செல்லலாயினர். அவர்தம் அளப்பரும் அன்பினை யொத்து மக்கள் பலரும் முன்னும் பின்னும் திரள்திரளாகத் தொடர்ந்து சென்றனர்.

௩௦

இருபெருந் தொண்டர்

மன்னர்பிரான் நாரையூர் நண்ணு முன்னர், நம் நம்பி யாண்டார் எதிர் சென்றழைத்தனர். வள்ளலைக் கண்டதும் வளவரும் யானை விட்டிறங்கி இறைஞ்சுவான் சென்றனர். யாவர் முன்னென்று இம்பொழு வண்ணம் வள்ளல் பணிந் தனர்; வளவரும் பணிந்தனர்; கட்டித்தழுவினர்; காதல் மொழிந்தனர். மேளம் முழங்க, மலர் மழை பொழிந்தது. அன்பர் பலரும் ஆர்ப்பெடுத் தேத்தினர்.

இராசராச தேவர் தம் பரிவாரம் புடைசூழத் திரு நாரையூரில் தங்கினர். அன்று, அந் நகரமாந்தர் அனைவரும் தத்தம் இல்லங்களை அலங்கரிக்கத் தொடங்கினர். அவர் கள் இல்லமெங்கும் நீர் தெளித்துக் கோலந் தீட்டினர்; பொற்குடமும், பாவிகையும் மேடைகளில் மிளிரச்செய்த னர்; அல்லிமென் மலரும், அன்றலர்ந்த தாமரையும் ஆங் காங்கே அழகுறச் செருகி வைத்தனர். மனைதொறும் மகர தோரணங்கள் மாண்புற்றிலங்கின. வெற்றிப் புலிக் கொடியும், சைவத் திருக்கொடியும் வீதியெங்கும் விளக்க முற்றுத்திகழ்ந்தன. உவகை மிகுதியால் செல்வச் சிறு மியர் பலரும் கூடி வளவனுர் பேர்பாடி அம்மானை ஆடியும், கொம்மை கொட்டியும் வாழ்த்துவா ராயினர்.

கதிரவன் எழுமுன்னர் யாவரும் பொல்லாப்பிள்ளையார் பொற்கோயில் நண்ணினர். சோழர் பெருமான் அன்று சொல்லொணு உவகையில் மூழ்கி நின்றனர். நம்பியாண்டார் நெய்யும் பாலும் தயிரும் தேனும் குடங்குடமாகக் கொண்டு அவ்வேழமுகத்து விநாயகர்க்கு மஞ்சன மாட்டி மகிழ்வு பூத்தனர்; நவமணி மாலையும், நறுமலர் மாலையும் அளப்பிலவாய் எடுத்துச் சாற்றி அழகு பார்த்தனர்; புழுகும், பனிநீரும் வாரி வாரி இறைத்து இன்புற்றனர். நம் அண்ணலாரது பூசையின் அருமைகண்டு அன்பர் அனைவரும் ஆனந்த சாகரத்து அழுந்தலாயினர்.

௩௧

ஆனைமுகனுர் அருள்வெளிப்பாடு

அபிடேகாலங்காரம் அனைத்தும் அழகுற முடிந்தபின் அவ்விநாயகப்பெருமானுக்கு நிவேதனப்பொருள்கள் பலவும் பான்மையின் வைக்கப்பட்டன. அப்பொருள்கள் பத்துக் காதம் வரையில் பரந்திருந்தனவாமென்னின் அவைகளின் அருமை பெருமைகளையும், தொகை வகை நேர்மைகளையும் விளக்கமுற எடுத்து யாவர்தான் விளம்பவல்லார்! உண்ணுதற்குகந்த யாவும் ஆங்கே அளப்பிலவாய் நிரம்பி இருந்தன. பல்வகைப்பழங்களின் தொகுதியும், சித்திரான்னக் குவியல்களும் பெருமலையும் குன்றுகளுமென்னப் பொலிவுற்றுத் திகழ்ந்தன.

தூபதீபங்களும், திருநாமத்தோத்திரங்களும் முறைபெற முடிந்ததும், நம்பியாண்டார் நாரையூர்ப் பெருமானை நயந்து வேண்டினர். வேண்டலும், அக்கற்சிலையினின்றும் விநாயகப்பெருமான் கருணையின் வெளிப்பட்டனர். அப்

பெருமானின் அற்புதத் தோற்றங்கண்ட அனைவரும் அதி சயித்து நின்றனர். இராசராசசோழர் அன்பின் மிகுதியால் மெய்ம்மயிர் பொடிப்ப, நெஞ்சம் நெக்குருகக் கண்ணீர் வடித் துக் கைகூப்பித் தொழுதனர்; நெடிது விழுந்து நிலமுறப் பணிந்தனர்.

நாரையூர்நம்பி அருகேயிருந்து அன்புமொழிகூற ஐங் கரத்தழகனார் தம் நீண்ட துதிக்கையால் அப்பொருள்கள் அனைத்தினையும் வாரிவாரி உண்டருளினார். அப்பிள்ளையார் உணவுகொண்ட அற்புதம் இயம்புந் தரமன்று. அவர் நூறு கூடை மாம்பழங்களை நொடிப்பொழுதில் அமுது செய்தார்; பலாப்பழங்களையும், வாழைக் குலைகளையும் அவர் இமைக்கு முன்னர் எடுத்தெடுத்து விழுங்கினார். அவலொடு கலந்த கடலைக் குவியலும், பொறிவிளாங்கனிகளும், சருக்கரைப் பொங்கலும், தீம்புளிச் சோறும், அப்பமும் யாவும் அப்பெரு மான் துதிக்கை நீட்டத் துணுக்கென மறைந்தன.

௧௨

தமிழ்மறையின் தெய்வீகம்

ஆனைமுகப் பெம்மான் அமுதுண்ட காலத்து அன்பர்கள் யாவரும் 'ஹர-ஹர' வென்று ஆர்ப்பெடுத் தேத்தினர்; 'ஜய-ஜய' வென்று போற்றித் துதித்தனர். இராசராச சோழர், தம்மை முற்றிலும் மறந்து இன்பப் பெருவாரியில் திளைத்து நின்றனர்.

விநாயகப் பெருமான் திருவமுதுண்டதும் நம் மன்னர் பிரான் நம்பியும் பெருமானை அணுகிப் பணிந்து போற்றி "அடி யேங்கள் உய்யவந்த பெருந்தகையீர்,நெஞ்சகம் உருக்கும் செந் தமிழ்ப் பனுவலாய தெய்வத் தமிழ்மறையை-அருண்ஞானக்

களஞ்சியத்தை-அற்புதத்தேவாரத்தை-அடியேன் காணுமாறு பெரிதும் விழைகின்றேன். ஏவலாளர் எவ்விடத்தும் சென்று துருவித் துருவிப் பார்த்தனர். அவர்கள் அவ்வாறு அலைந்து தேடியும் அவ்வருந்தமிழ்வேதம் அகப்பட்டிலது. ஆதலின், ஆனைமுகத்தோற்கு அமுதூட்டும் அருளுடையீர், அற்புதத் தெருளுடையீர், அப்பேரின்பப் பெருநிதியை—சிவஞான பொக்கிஷத்தை—அடியேன் பெற்று உய்யுமாறு அருள்புரிதல் வேண்டும்'' என்று கண்களில் அருவிசோரக் கைகூப்பித் தொழுது மிக்க ஆராமையோடுங் கூறினர்.

அதனைச்செவியுற்ற நம் நம்பி அடிகளார் ''வேந்தர் வேந்தே, வருந்துதல் வேண்டாம். நாம் வேண்டுவன யாவும் வேழமுகனார் இனிதின் அருளுவர்'' என்றுகூறிக் கோயிலுள் கடுகிச் சென்றனர்.

அண்ணலார் ஆலயம் சென்றதும் யாவரும் அவரது வருகையை அவாவுடன் எதிர்பார்த் திருந்தனர். இராசராச தேவரின் உள்ள நிலையினை உரைக்கவும் வேண்டுமோ? அவர், தம் ஐம்பெரும் புலன்களும் கண்களே கொள்ள ஆனைமுகனார் ஆலயம் நோக்கினர். இங்ஙனம் சிறுபோது சென்றது. சைவம் தழைக்கத் தமிழ்வேதம் சிறந்தோங்கத் தெய்வத்திருவருளின் திறம்விளங்க வெளிவந்தார் நம்வள்ளலாராய நம்பியாண்டார் நம்பி. அதுபோது அப் பெருந்தகையார் எல்லாக் கலைகளையும் கசடறக் கற்றுச் சிவஞானம் கைவரப் பெற்ற செம்மனச் செல்வராய் விளங்கினர்.

அண்ணலார் வருகை கண்ட அன்பர் அனைவரும் ஆனந்தத்தால் அவர் தம் இணையடி ஏத்தினர். மன்னர் பெருமானும் நம் மாதவர் மலரடி வணங்கி, அவர்தம் திருமுகம் நோக்கிப் பணிவின் நின்றனர். சிவஞானச் செல்வ

ராய நம்பியாண்டார் இராசராச தேவரையும் மற்றுமுள்ள அன்பரையும் கருணையின் நோக்கிக் கூறுவாராயினர் :

" அரசர் கோமானே, அன்பர்களே, என் ஐயன் மொழிந்த அதிசயச் செய்தியை நான் என்னென்று இயம்பு வேன்! ஆ-ஆ! அஃது ஆனந்தம்-ஆனந்தம்! அன்பர்களே, இறையவன் இன்ப அடியினை எய்த எண்ணினல்,—இப்புல் லிய வாழ்வைப் போக்கக் கருதினல்—மூவர் மொழியினைப் போற்றுமின்—போற்றுமின். ஈசன் ஒருவனே; அவன் அருட்கோலம் அளப்பில. அன்பர்களே, இவ்வுண்மையை நீவிர் உணரவேண்டின் மூவர் மொழிந்த தேவாரத்தொகுதி யைத் தாழாதோம்புமின்—தாழாதோம்புமின். சிவ நேயச் செல்வர்களே, அச்செந்தமிழ் வேதமே நம் உள்ளத்தை உருக் கும்; உணர்வினைப் பெருக்கும்; கள்ளத்தை ஒழிக்கும்; காதலை வளர்க்கும். அன்றியும், அதுவே சாகாக்கல்வி, மூவா மருந்து, கைகண்ட மந்திரம்.

" அன்பர்களே, அதன் அருமை பெருமைகளை அளவிட் டுச் சொல்ல எவராலும் இயலாது. அவ்வேதத்தை விரித் துரைத்த மூவர்தம்முள் திருஞான சம்பந்தர் ஒருவராகும். அவர் காழிப்பதியினர்; கவுணியர் குலத்தினர்; மூன்றும் ஆண்டில் ஞானம் பெற்றவர்; செம்பொற்றாளம் சிறக்கக் கொண்டவர்; முத்துச் சிவிகையர்; வெற்றிக் கொடியினர்; அமணர்தம்மை வாதில் வென்றவர்; என்பினைப் பெண்ணென எழுப்பித் தந்தவர்; அவர்தம் திருமணங் கண்ட அடியவர் பலர்க்கும் மோட்ச வீட்டின் ஆட்சி தந்தவர். அவர் இயற் றிய அற்புதப் பதிகங்கள் பதினறாயிரமாகும்.

"சிவநேயச் செல்வர்களே மற்றையர், இருவருள் ஒரு வர்தம் நாமம் உரைக்கக்கேளும்: அதுவே நாவுக்கரசெனும்

நற்பெயராகும். அவர் திருவாமூரினர்; வேளாண் மரபினர்; சூலேநோயால் சிவனருள் பெற்றவர்; நீற்றறை தன்னில் நிலவி யுய்ந்தவர்; வெம்மத வேழம் வணங்கும் பெருமையர்; கற்புணை யதனுல் கடலைக் கடந்தவர்; திருமறைக் கதவினைப் பாடித்திறந்தவர்; அரவு கடித்த மைந்தனை உயிர்த்தவர்; ஐயாறதனில் கைலாயங் கண்டவர். அவர் இயற்றியருளிய திருப்பதிகங்கள் நாற்பத்தொன்பதி னுயிரமாகும்.

அன்புமிகு பெரியோரே, மற்றொருவர் யாவரெனின் கூறக்கேண்மின்: அவர் நம்பியாரூரரெனும் நாமம் பெற்றோர்; சிவபெருமான் தடுத்தாளும் தவம் மிகுந்தோர்; பரவையினைச் சங்கிலியைப் பாகம் வைத்தோர்; செங்கல்லைப் பொன்னுகச் செய்யவல்லோர்; திருத்தொண்டத் தொகைபாடுந் திறமை வாய்ந்தோர்; தேவர்களும் முனிவவர்களும் துதித்துப் போற்ற வெள்ளானை மீதேறிக் கைலை சேர்ந்தோர். அவர் அன்பு கூர்ந்தருளிய அருந்திருப்பாக்கள் முப்பத்தெண்ணுயிர மதாகும்.

"பத்திமிகும் அடியவரே, நம் பரமனுர் அடியேற்கு அருள் செய்த அற்புதச் செய்திகள் அளப்பில. நம் ஆனைமுக அண்ணலார் அறுபான்மும்மை நாயன்மார் அருஞ்செயல்களையும், அவர்தம் அன்பின் எல்லையினையும் அடியேற்கு எளிதின் உணர்த்தினுர். அன்றியும் அன்பர்களே, அபயகுல சேகரரே, அத்தும்பிமுக வள்ளல் நம் தெய்விகத் தமிழ்வேதத் தொகுப்பின் இருப்பினையும் எளியேற்குக் கருணையினல் அறிவித்தருளினுர். அத்தெய்விகத் திருப்பனுவல்—தித்திக்கும் தேவாரம்—தில்லையம்பதியில் திகழா நிற்கின்றது. மூவர்தம் திருக்கரமும் பொறித்திருப்பதுவே பேரடையாள மெனப் பெம்மான் மொழிந்தனர். ஆதலின், அரசரேறே, அப்பெறலரும் தமிழ்

வேதத்தை அடியேங்கள் உய்யவேண்டி ஆராய்ந்து தரல் வேண்டும்.''

௫௫

தில்லையம்பதி

அதனைச் செவிமடுத்த அன்பர்கள் பலரும் இன்பக்கடலுள் திளைத்து நின்றனர். அரசர் பெருமான் ஆனந்தக் கண்ணீர் வடித்தனர்; அன்புமொழிகள் புகன்றனர்; ஆடிப்பாடி அரற்றினர்; நம் அண்ணலார்தம் அடிகளில் விழுந்து விழுந்து பணிந்தனர்.

இங்ஙனம் சிறுபோது சென்றது. அரசர் பெருமான் கொண்ட ஆர்வத்திற்கு அளவேயில்லை. அவர் அத்தேவாரத் தொகுதியை அதுபோதே காண விழைந்தனர்; கட்டித் தழுவக் கருதினர்; அவர் அத்தீந்தமிழ் வேதத்தை நினைந்து நினைந்து கண்ணீர் பெருக்கினர்; கைகூப்பித் தொழுதனர். ஆதலின், அப்பெருமான் எண்ணம் அறிந்த அன்பர் யாவரும் அதுபோதே தில்லையம்பதிக்குச் செல்ல விழைந்தனர்.

மக்கள் தொகுதியும் ஆரவார மிகுதியும் முன்னினும் பன்மடங்கு அதிகரித்தன. மேளதாள முழக்கமும், தாரை தப்பட்டைகளின் பேரொலியும், திருச்சங்கநாதமும் மேலும் மேலும் மிக்கெழுந்து ஒன்றினையொன்று அடக்க முயன்றன. நம்பியாண்டார் நம்பியும், இராசராச சோழரும் யானைமீது இவர்ந்து வர அன்பர்பலரும் 'ஹர-ஹர' வென்று ஆர்த்த வண்ணம் அவர்தம்மைத் தொடர்ந்து சென்றனர்.

இங்ஙனம் அவர்கள் சிலநாழிகை செல்லலாயினர். பின்னர், அவர்கள் தில்லைக்கோபுரம் திகழக்கண்டனர். கோபுரங் கண்டதும் யாவரும் கைகுவித்துப் போற்றினர்; அடிபணிந்து

வணங்கினர்; இறையவன் திருநாமங்கள் அளப்பிலவாய் எடுத்தெடுத்தோதினர். இராசராச சோழரும், நம்பியாண்டார் நம்பியும் ஆனந்தப் பரவசமுற்றனர்.

தில்லையம்பதியின் திருவழகதனைச் சொல்லவும் வேண்டுமோ? ஆங்குச் செல்லுமிடந்தோறும் தெய்வமணம் வீசியது. வீதியெலாம் வெண்ணீற்றின் பேரொளியால் பொலிந்து தோன்றின. வியன்மாட மாளிகைகள் அம்பலவன் நடமாடும் ஆலயமாய்த் திகழ்ந்தன. ஆண்டுள்ள கிள்ளைகளும், பூவைகளும் அஞ்செழுத்ததனையே ஆர்வமுற அரற்றலாயின. அந்தணர் மூவாயிரவர் அருளொழுகு விழியினராய், அன்புநிறை நெஞ்சினராய் அரனெனவே அதிசயிக்கத் தோன்றி நின்றனர்.

இவ்வற்புதங்கண்ட தஞ்சைவள்ளவரும், திருநாரைப் பதியாரும் தாம் செல்லும் வழியெல்லாம் வீழ்ந்து வீழ்ந்து சேவித்தவண்ணம் சென்றனர். அதுகண்ட அன்பர்கள் யாவரும் அவ்வாறே அடிபணிந்து அரன்கழல் வாழ்த்தினர்.

௩௪

மூவர் தேவாரம்

சிறிது நேரத்துள் யாவரும் அம்பலவன் ஆலயம் நண்ணினர். அச்சிற்றம்பலத்தின் சிறப்போ சொல்லி முடியாது. அது பேரம்பலமாய்ப் பொலிவுற்றுறெளிர்ந்தது. எழுநிலை மாடங்கொண்டு நாற்புறமும் நின்றிலங்கும் கோபுரவாயில்களும், அந்தணர்கள் எரியோம்பும் ஆயிரக்கால் மண்டபமும், அற்புதப் பொன் அம்பலவன் நடமாடும் திருமன்றுங் கண்ட அன்பர்கள் யாவரும் மெய்ம்மயிர் பொடிப்ப, விழிநீர் பெருக்கி, நெஞ்சநெக்குருகி, மெய்ம்மறந்து நின்றனரென்னில், இராசராச சோழரும் நம்பியாண்டார் நம்பியும் அடைந்த ஆனந்

தம் இவ்வளவென்றளவிட்டுச் சொல்ல வியலுமோ! அவர்கள் கன்றினைக்கண்ட புனிற்றாவென்ன ஆராத காதலினால் ஆர்வ மொழி பல புகன்று அன்பில் திளைத்து இன்புற்றிருந்தனர்.

ஆலய தரிசனம் முடிந்ததும், நம் இராசராச சோழர் ஆண்டுள்ள தில்லைவாழந்தணர் அனைவரையும் வணங்கி நாரையூர்ப் பொல்லாப்பிள்ளையார் நவின்ற புதுமையினைப் புகன்று நின்றனர். அதனைத் தில்லை மூவாயிரவர் அதிசயித்துக் கேட்டு அங்ஙனமே அடையாளம் அழகு பெற இருக்கக் கண்டு மகிழ்ச்சி பூத்து அத்திருக்கதவதனைத் திறக்க முயன்றனர்.

பெரிதுமுயன்றும் இயலாமைகண்ட அத்தில்லைவாழந்தணர் "அரசரேறே, இது மூவர்தம் திருக்கரத்தால் முத்திரை பெற்றுளதால் அம்மூவரும் வந்தாலன்றித் திறக்கவியலாது" எனமொழிந்து சென்றனர்.

அதுகேட்டு அரசர்பெருமான் ஆவி சோர்ந்தார்; "கைலாயம் கண்டடைந்த மூவர் தம்மையும் ஈண்டு எவ்வாறு எழுந்தருளச் செய்வது" என எண்ணி எண்ணிப் பெருமூச்செறிந்தார்; இனிச் செய்வது யாதெனச் சிந்தித்தார்; பின்னர்த் திகைத்தார்; கண்ணீர் வடித்தார்; முடிவில் மனங்கலங்கிச் செயலொழிந்து நம்பியாண்டார் நம்பியை நோக்கினார்.

அதுபோது நம் அண்ணலாராய நம்பியடிகள் அபயகுல சேகரரை அன்புகூர்ந்து நோக்கி "மன்னவர் பெருமானே, நாம் ஏன் மனங்கலங்கல் வேண்டும்? நம்மனோர் உய்யும் பொருட்டு அம்மூப்பெருந் தொண்டரும் இத்திருக்கோயிலின் கண் வீற்றிருக்கின்றாரன்றோ? அவர்தம்மை நாம் எழுந்தருளச் செய்யின் இத்திருக்கதவம் தானே திறக்கும்" என இயம்பினர்.

அதனைச் செவியுற்ற நம் இராசராசதேவர் இன்முகங் காட்டினர். அதுபோதே, நம் அரசர் பெருமான் அம்மூவர் தமக்கும் திருவிழா வியற்றத் திருவுளங் கொண்டனர்.

அக்கோயிலின்கண் எழுந்தருளியுள்ள முப்பெருந் தொண்டர்க்கும் அபிஷேகாலங்காரங்கள் யாவும் மிகச் சிறப்பாக நடைபெற்றன. பின்னர், அம்மூவரையும் ஒன்ருக எழுந்தருளச்செய்து, இராசராசதேவர் தில்லைவாழ் அந்தணர்தம் அடிபணிந்து, "ஐயன்மீர், தாங்கள் மொழிந்தவாறே மூவரும் இவண் வந்தெய்தினர்" என்றனர்.

அது கேட்ட அந்தணர் அதிசயித்து நோக்கி, அரசர் பெருமான் கொண்டுள்ள அன்பினுக் குவந்து "அங்ஙனமாயின் அவ்வறை தானே திறக்கும்" என்றனர். அதுபோதே அத்திருக்கதவம் "படீர்" எனத் திறந்தது.

௫௫

இறைவன் அருட்டிரம்

அறை திறந்த அற்புதங்கண்ட அன்பரனைவரும் 'ஹர-ஹர' வென்று ஆரவாரித்தனர். அம்பலவன் செம்பொற்பாதம் போற்றிப் பணிந்தனர். திருவருள் தன்மை நினைந்து தில்லைவாழ் அந்தணர் உள்ளம் உவந்தனர். நம்பி அடிகளார் கண்மாரி சொரியச் சொன்மாரி பொழிந்தார். இராசராசதேவர் "அடியேன், உய்ந்தேன்—உய்ந்தேன்" என்று ஆனந்தக் கூத்தாடிப் பள்ளத்துட்பாயும் பெருவெள்ளமென்னப் பேரவாப் பெருகி எழ அவ்வறையின் உட்புறத்தே உவந்தோடினர்.

உள்ளே புகுந்த புரவலர் நாற் புறமுஞ் சுற்றிப் பார்த்தனர். அவர் அத்தெய்வத் தமிழ்வேதத்தை எப்புறத்துங்கண்

டிலர். பின்னர், ஒரு புறத்தே பெட்டகம் போன்று செல்லுப் புற்றொன்று இருத்தல் கண்டு, நம் சோழர் பெருமான் அருகே சென்று அதனைக் கூர்ந்து நோக்கினர். அது மூவர் மொழிந்த தமிழ் வேதத் தொகுதியாய் இருத்தல் கண்ட நம் மணி முடிச்சோழர் "அந்தோ! கெட்டேன்—கெட்டேன்" என்று வாய் விட்டரற்றிய வண்ணம் அதனை அவாவுடன் விரைந்தெடுத்து வெள்ளிடையிற் கொணர்ந்து வைத்தனர். அதனைக் கண்ட அன்பர்கள் யாவரும் "அந்தோ—அந்தோ" என அலறினர்.

மேலே மூடியிருந்த மட்குவியலை நீக்கி, அத்தேவார ஏடுகளின் மீது ஏவலாளர் குடங்குடமாக எண்ணெய் கொணர்ந்து கொட்டலாயினர். சிறிது நேரத்துள் அவ்வேடுகள் யாவும் செப்பஞ் செய்யப்பட்டன. பின்னர், வளவர்கோன் அதனை வாங்கிப்பார்க்க அளவற்ற ஏடுகள் பழுதுபட்டிருக்கக் கண்டனர்.

மூவர் அருளிய பாடலின் தொகையும், செல்லுக்கிரையாயின போக மிகுந்து நின்ற பாடல்களின் தொகையும் வருமாறு :—

	ஆதியில் உள்ளன.	அவர்கட்குக் கிடைத்தன.
ஞானசம்பந்தர்	16,000	385
நாவுக்கரசர்	49,000	311
நம்பியாரூரர்	37,000	100
ஆ. மொத்தம்	1,02,000	796 பதிகங்கள்.

தமிழ்வேதம் இவ்வாறு சிதைந்திருக்கக்கண்ட அபயகுல சேகரர் ஆற்றொணாத் துயரடைந்து "பொன்னம்பலவனை,

இஃது உன் பெருங்கருணைக் கழகாமோ? அன்பர் பலரும் உய்யும் பொருட்டு அருள் சுரந்து மொழிந்த மூவர் தேவாரம் இவ்வண்ணம் பழுதுபட நீ எவ்விதம் பார்த்திருந்தாய்? ஓ இறையவனே, என் ஈசா, இனி நான் யாது செய்வேன்! எங்ஙனம் உய்வேன்! ஏழையேன் பட்ட பாடனைத்தும் பய னற்றுப் போயிற்றே! அந்தோ—அந்தோ! இவ்வற்புதத் தேவாரத்தை—தித்திக்கும் தமிழ் வேதத்தை—சிவஞானக் களஞ்சியத்தை— இனியான் எங்ஙனம் பெறுவேன்—எங் ஙனம் பெறுவேன்'' என்று பலபல, அரற்றி நிலமிசை விழுந்து புரண்டார்; கதறி அழுதார்; முடிவில் மூர்ச்சித்தார்.

நம் அரசர் பெருமான் அன்பின் அளவினைக் கண்ட தில்லை யம்பலவனுர் அதுபோது ஆகாயத்தின்கண் அசரீரி யாக ''மன்னவனே, நீ வருந்துதல் வேண்டாம். வன்மீகம் வந்து மொய்க்க யாமே அருள் புரிந்தோம். இவ்வுலகிற்கு உகந்தனவே இதுபோது உள்ளன. ஆதலின் அன்பனே, இப்பாக்களைப் பெற்று நீ இன்புறுக'' என்று அங்குள்ள எல் லோரும் கேட்க இசைத்தருளினுர்.

௩௬

திருமுறை வகுத்தல்

அவ்வருள்மொழி கேட்ட அரசர் பெருமான் ஆனந்த சாகரத்தில் அழுந்தினுர். அவர்தம் விழிகளினின்றும் இன் பக்கண்ணீர் வழிந்தோடியது. நாரையூர் நம்பியாண்டாரும் அவ்வாறே ஆனந்த பரவசமுற்று விழியருவிசோர நடராஜ வள்ளலை வாழ்த்தி வணங்கினர். ஆங்குக் குழுமியிருந்த அடி யவர் பலரும், ஆதிசைவ அந்தணப் பெரியோரும் அவ்வாறே அன்பு மீதூர அம்பலவன் கழல்போற்றி நின்றனர்.

இராசராசதேவர் அத்தேவாரத் தொகுதியைப் பெற்ற ஆனந்தத்தால் அன்பர் பலரும் வந்து கொள்ளை கொள்ளு மாறு தம் பண்டாரசாலையைத் திறந்து விட்டனர். அன்றி யும் அவர், தம் ஆளுகையில் உள்ள எல்லா ஆலயங்களிலும் சிறப்புறத் திருவிழா நடைபெறுமாறு செய்தனர்.

நம்பியாண்டார், தில்லையம்பலத்துள் தாண்டவம் 'புரி யும் நடராசப்பெருமான் மீதும், தமிழ்வேதம் விரித்துரைத்த மூவர் மீதும், பிற அடியார் மீதும் நாளும் நாளும் முறுகி வளர்ந்த அன்பின் பெருக்கால், கோயிற் றிருப்பண்ணியர் விருத்தம், திருத்தொண்டர் திருவந்தாதி, ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, ஆளுடைய பிள்ளையார் திருச் சண்பை விருத்தம், ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக் கோவை, ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை, ஆளு டைய பிள்ளையார் திருக்கலம்பகம், ஆளுடைய பிள்ளை யார் திருத்தொகை, திருநாவுக்கரசு தேவர் திருவேகாதச மாலை முதலிய பல நூல்களை இயற்றியருளினர். அவை பத் திச்சுவை நிறைந்தும், சமத்காரம் மிகுந்தும் கற்போர் மனத் தைக் கவருந்தன்மையனவாய்க் காணப்படுகின்றன. அவற் றுள் ஒரு சில காட்டுதும்.

கோயிற் றிருப்பண்ணியர் விருத்தம்

தண்ணுர் புனல்தில்லைச் சிற்றம்பலந் தன்னின் மன்னி நின்ற
விண்ணுளனைக் கண்டநாள் விருப்பாய் என்உடல் முழுதுங்
கண்ணுங்கிலோ தொழக் கையாங்கிலோ திருநாமங்கள்கற்று
எண்ணும் பரிசெங்கும் வாயாங்கிலோ எனக்கிப் பிறப்பே.

வருவாசகத்தினின் முற்றுணர்ந்தோனை வண்டில்லைமன்
திருவாதவூர்ச் சிவபாத்தியன் செய்திருச்சிற்றம்பலப் [னைத்

பொருளார்தரு திருக்கோவைகண்டேயு மற்றப்பொருளைத்
தெருளாத உள்ளத்தவர் கவிபாடிச் சிரிப்பிப்பரே.

ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி

ஒளிவந்தவா எழிற்பூவரைஞாண் மணித்தார்சழுங்கத்
துளிவந்த கண்பிசைந்தேங்கலும் எங்கள் அரன்துணையாம்
கிளிவந்த சொல்லி பொற்கிண்ணத்தின் ஞான வமிர்தளித்த
அளிவந்த பூங்குஞ்சியின் சொற்சிறுக்கன்ற ரூரருளே.
முத்தன வெண்ணகையார் மயல் மாற்றி முறைவழுவாது
எத்தனை காலநின்றேத்தும் அவரினும் என்பணிந்த
பித்தனை யெங்கள் பிரானை அணைவ தெளிதுகண்டீர்
அத்தனை ஞான சம்பந்தனைப் பாதம் அடைந்தவர்க்கே.

ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை

புனமாமயில் மயல்கண்டு முன்போகா, கிளிபிரியா
இனமான் விழியோக்குமென்று விட்டேகா இருநிலத்துள்
கனமாமதிற் காழி ஞானசம்பந்தன் கடன் மலைவாய்த்
தினைமா திவள் காக்க எங்கே விளையுஞ் செழுங்கதிரே.

பின்னர், இராசராசதேவர் செல்லுக்கிரையாயின போக தமக்கு அருமையிற் கிடைத்த அத்தேவாரத் தொகுப்பினைத் தில்லையம்பலவன் முன்னிலையில் நம்பியாண்டாரின் துணைகொண்டு திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் அருளிய பாக்களை மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாய் மலர்ந்த பாடல்களை மூன்று திருமுறைகளாகவும், சுந்தர மூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த அரும் பாக்களை ஒரு திருமுறையாகவும் பகுத்து, எழு திருமுறைகளாகத் தொகுத்தனர். அதனால், அவ்வரசர் பெருமானுக்குத்

திருமுறை கண்ட சோழர் என்னும் சிறப்புப்பெயரும் வழங்கலாயிற்று.

இவ்வாறு வகுத்ததும் அவ்வளவர்கோன் நம்பியாரைப் பெருமான் உதவி கொண்டு மணிவாசகனார் மொழிந்தருளிய திருவாசகத்தையும், திருக்கோவையாரையும் எட்டாந் திருமுறையாகவும், திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருத்தி நம்பிகாடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் முதலிய ஒன்பதின்மர் செய்த திருவிசைப்பாவினையும், சேந்தனார் அருளிச்செய்த திருப்பல்லாண்டினையும் ஒன்பதாந் திருமுறையாகவும், திருமூலநாயனார் அருளிச்செய்த திருமந்திரத்தைப் பத்தாந் திருமுறையாகவும் சேர்க்கலாயினர்.

பின்னர், அம்மன்னர் பெருமான் நம்பியாண்டார் நம்பியின் பொற்பாதங்களில் வீழ்ந்து பணிந்து "அடிகளே, தாங்கள் இயற்றியருளிய திருப்பாக்களையும், திருவாலவாயுடையார் அருளிச்செய்த திருப்பாசுர முதலாகப் பிறநூற் பாக்களையும் சேர்த்துப் பதினோராந் திருமுறையாக வகுத்தருள வேண்டும்" என விண்ணப்பித்துக் கொள்ள நம்பெருமானும் மன்னவர் பணியினை மறுத்தற் கியலாது அவ்வாறே தம் நூலையும் சேர்த்துத் தொகுத்தருளினார். அந்நூற்களின் பெயரும், ஆசிரியர் பெயரு வருமாறு.

1. திருவாலவாயுடையார்:—திருமுகப்பாசுரம்.
2. காரைக்காலம்மையார்:—திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், திருவிரட்டைமணிமாலை, அற்புதத் திருவந்தாதி
3. ஐயடிகள் காடவர்கோனயனார்:—க்ஷேத்திரத் திருவெண்பா.

4. சேரமான் பெருமாள் நாயனார்:—பொன்வண்ணத் தந்தாதி, திருவாரூர் மும்மணிக்கோவை, திருக்கைலாய ஞானவுலா.

5. நக்கீரதேவர்:—கைலைபாதி காளத்திபாதி அந்தாதி, திருவீங்கோய்மலை எழுபது, திருவலஞ்சுழி மும்மணிக்கோவை, திருவெழுகூற்றிருக்கை, பெருந்தேவபாணி, கோபப்பிரசாதம், காரெட்டு, போற்றித் திருக்கலிவெண்பா, திருமுருகாற்றுப்படை, திருக்கண்ணப்பதேவர் திருமறம்.

6. கல்லாடதேவ நாயனார்:—திருக்கண்ணப்ப தேவர் திருமறம்.

7. கபிலதேவர்:—மூத்தநாயனர் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவந்தாதி.

8. பரணதேவர்—சிவபெருமான் திருவந்தாதி.

9. இளம்பெருமானடிகள்:—சிவபெருமான் திருமும்மணிக்கோவை.

10. அதிராவடிகள்:— மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை.

11. பட்டினத்துப் பிள்ளையார்:—கோயில் நான்மணி மாலை, திருக்கழுமல மும்மணிக்கோவை, திருவிடை மருதூர் மும்மணிக் கோவை, திருவேகம்ப முடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒருபாவொருபது.

12. நம்பியாண்டார்:—விநாயகர் திருவிரட்டை மணிமாலை கோயிற் திருப்பண்ணியர் விருத்தம், திருத்தொண்டர் திருவந்தாதி,

ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி
,, திருச்சண்பை விருத்தம்
,, திருமும்மணிக் கோவை
,, திருவுலாமாலை
,, திருக்கலம்பகம்
,, திருத்தொகை
திருநாவுக்கரசு தேவர் ஏகாதசமாலை.

௧௰. பிரபந்தங்கள் நாற்பது.

௩ எ

முடிபுரை

மேற்கூறியவாறு பதினொரு திருமுறைகளையும் வகுத்த பின்னர் இராசராசசோழர் அத்திருமுறைகட்குப் பண் வகுக்க விரும்பினர் எனினும் அச்செந்தமிழ்ப் பாக்களின் முறை யறிந்து பண்வகுக்க ஆங்கு ஒருவரும் நேராமை கண்ட தஞ்சை வளவனார் சிறிதே தயங்கினர். அதுபோது, நம் நம்பியடிகளார் மன்னவரைநோக்கி, "அரசர் பெருமானே திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் பாடியருளுங்கால் உடனிருந்து யாழ் வாசித்த திருநீலகண்ட யாழ்ப்பாணர் அவதரித்த தலமாய திருவெருக்கத்தம்புலியூர் செல்லின் நம் எண்ணம் நிறைவேறும்" எனக்குறிப்பிக்கச் சோழர்பிரானும் நம் அடிகளார் கருத்துக்கு இசைந்தனர்.

அரசர் பெருமானும், அந்தணச் செல்வரும் அன்றே நடுநாட்டிலுள்ள திருவெருக்கத்தம்புலியூருக்குச் செல்லலாயினர். அவர்கள் அவ்வூரை யடைந்து பல்லிடத்துந் தேடியும் பண்ணடைவிற் புலமை வாய்ந்தோர் ஒருவரும் கிடைக்கப் பெறாது வருந்தி அத்தலத்தின்கண் எழுந்தருளியுள்ள சிவ

பெருமானை இரந்து வேண்டலும், அப்பெருமான் அசரீரியாக் "அன்பரே, திருநீலகண்ட யாழ்ப்பாணனது சிறந்த மரபின் வழிவந்த நங்கை யொருத்திக்கு யாம் பண்ணடைவு தெரித்துள்ளோம். ஆதலின், அப்பெண்மணியால் உமது கருத்து நிறைவேறும்" என இசைத்தருளினர்.

அதனைச் செவியுற்ற அன்பர் இருவரும் ஆனந்த பரவசமுற்று, அவர் அருளியவாறே அப்பெண்மணியாரின் துணைகொண்டு பதினொரு திருமுறைகட்கும் பண்ணடைவு செய்தனர்.

இவ்வாறு நம் இராசராசதேவர் புரிந்த புண்ணியச் செயல்கள் அளப்பில. அவர், தஞ்சைமாநகரில் தம் பெயரால் கண்டோர் வியக்கும் வண்ணம் ஒரு சிவாலயம் கட்டுவித்தார். இப்போதும் தஞ்சையிராசராசேச்சரம் என்னும் அரும் பெயர் பூண்டு அஃது இலங்குகின்றது. திருவிசைப்பா இயற்றியருளிய கருவூர்த் தேவரும் அவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை உள்ளம் உருகிப் பாடியுள்ளாரெனின் அதன் பெருமையை இயம்பவும் வேண்டுமோ?

'உலகெலாம் தொழ வந்தெழு கதிர்ப்பரிதி
    ஒன்று நூறுயிரங்கோடி
அலகெலாம் பொதிந்த திருவுடம் பச்சோ
    அங்ஙனே அழகிதோ! அரணம்
பலகுலாம் படைசெய் நெடுநிலைமாடம்
    பருவரை ஞாங்கர் வெண் திங்கள்
இலகுலாம் பதணத் திஞ்சி சூழ் தஞ்சை
    இராசராசேச் சரத்திவர்க்கே'

—கருவூர்த் தேவர் திருவிசைப்பா.

இங்ஙனம் இராசராச தேவர் எண்ணில் புண்ணியச் செயல்கள் இனிதின் இயற்றி இறையவன் திருவடி நிழலில் இரண்டறக் கலந்தனர்.

நம் நாரையூராளியாய நம்பியாண்டார் நம்பியும் அழலிடைப்பட்ட மெழுகென உள்ளம் உருகி உரோமஞ் சிலிர்ப்ப இடையறுப் பேரன்பில் ஈடுபட்டுப் பொன்னம்பலவன் பொற்பாதப் போதினைப் பன்னெடுங்காலம் போற்றித் துதித்து, விண்ணவர் வியக்க மண்ணவர் மகிழ்ந்தேத்த வைகாசித் திங்களில் புனர்பூச நன்னாளில் பேரின்பப் பெருவாழ்வைப் பெறுவாராயினர்.

முற்றிற்று

78179

K. P. Works, Madras.

சென்னை

டீசர்ஸ் பப்ளிஷிங் ஹௌஸ்

பிரசுரங்கள்.

***Approved by the text Book Committee.**

		Rs.	A.
1.	*Association Reader I (Tamil) ...	0	2
2.	* do. do. II do. ...	0	3
3.	do. do. III do. ...	0	3½
4.	do. do. IV do. ...	0	4
5.	*Practical Arithmetic Book II (Tamil) for 4th class	0	5
6.	* do. do. Bk. III Tamil for 5th class	0	8
7.	do. do. Telugu ...	0	8
8.	T. P. H. Ele. Mathematics for Form I (Tamil)	0	10
9.	do. do. Form II ...	0	10
10.	do. do. ,, III ...	0	10

(Telugu editions are also available for these Ele. math. books).

			Rs.	A.
11.	புகழேந்திப்புலவர்	....	0	10
12.	சிறு பொறி பெருந் தீ	....	0	6
13.	கற்பின் மகிமை	Part I	0	1
14.	,,	,, II	0	1
15.	நம்பியாண்டார்	....	0	6

THE TEACHERS' PUBLISHING HOUSE,

G. T., Madras.

N. B.—இதர கம்பெனி புஸ்தகங்களும் பஜார் விலைக்கு வாங்கி ஸப்ளை செய்யப்படும்.